# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

ilakku.org

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 307 | சனி, அக்டோபர் 05, 2024 | 14 பக்கங்கள்


# நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களை சிங்களக்கட்சிகள் உள்வாங்குவது ஆபத்தா?




பேராசிரியர் இராமு மணிவண்ணன்



# இந்தியாவை எவ்வாறு கையாளப்போகிறார் அநுர?


அகிலன்



# இஸ்ரேலினால் தடுக்க முடியாத ஈரானின் ஆயுதங்கள்

வேல்ஸில் இருந்து அருஸ்

குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 37வது நிறைவாண்டின் நினைவாக...




info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

# பொதுத் தேர்தலில் இளைஞர்கள்,மகளிர் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்!




2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் இளைஞர்கள் மற்றும் மகளிர் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என பெஃரல்(PAFFREL) அமைப்பு அரசியல்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த பெஃரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி, நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

நாட்டில் போராட்டக்காலத்தின் பின்னர் இடம்பெறுகின்ற நாடாளுமன்ற தேர்தல் இதுவாகும். நாட்டில் மாற்றம் ஒன்றை மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர். எனவே தேர்தலில் இளைஞர்களுக்கும் மகளிருக்கு முன்னுரிமையளிக்குமாறு நாம் அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என மேலும் தெரிவித்துள்ளது.

# ஹெயிட்டியில் குழு வன்முறை–7 இலட்சம் மக்கள் இடம்பெயர்வு

ஹெயிட்டியில் தொடரும் ஆயுதக் குழுக்களின் வன்முறை காரணமாக இதுரையில் 700,000 மக்கள் உள்நாட்டியேயே இடம்பெயர்ந்துள்ளதாகவும், அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் சிறுவர்கள் எனவும் இடம்பெயர்ந்தவர்களுக்கான அனைத்துலக அமைப்பு கடந்த புதன்கிழமை(2) தெரிவித்துள்ளது.



கடந்த ஜுன் மாதத்துடன் ஒப்பிடும்போது இது 22 விகிதம் அதிகரித்துள்ளது. கடந்த 7 மாதங்களில் 110,000 மக்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு சார்பான பல ஆயுதங் குழுக்கள் நாட்டின் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதுடன், வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. கடந்த பெப்ரவரி மாதம் இந்த குழுக்கள் சிறைச்சாலை மற்றும் அரச நிறுவனங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதை தொடர்ந்து அங்கு நிலைமைகள் மோசமாகி வருகின்றன.

நாட்டின் பிரதமர் ஏரில் ஹென்றி பதவி விலகியதைத் தொடர்ந்தே இந்த வன்செயல்கள் அதிகரித்துள்ளன. தற்போது அங்கு இடைக்கால அரச தலைவர் சபை அமைக்கப்பட்டுள்ளதுடன், கென்யா தலைமையில் ஐக்கிய நாடுகள் சபையின் பல நாடுகளை உள்ளடக்கிய படையினரும் அமைதி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு இடம்பெற்ற

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அமெரிக்காவில் வேலைநிறுத்தம் – பல பில்லியன் டொலர்கள் இழக்கப்படலாம்

அமெரிக்காவில் உள்ள துறைமுக பணியாளர்கள் ஊதிய உயர்வு கோரி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருவதால் பல பில்லியன் டொலர்கள் இழப்பீடுகள் ஏற்படலாம் எனவும், இது பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




International Longshoremen's Association (ILA) என்ற அமைப்பைச் சேர்ந்த 45,000 பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பணிப்புறக்கணிப்பு இரண்டாவது நாளை எட்டியுள்ள நிலையில் பணியாளர்களின் பிரச்சனையை உடனடியாக தீர்க்குமாறு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

மெயின் தொடக்கம் ரெக்சஸ் மாநிலம் வரையில் உள்ள 36 துறைமுகங்களின் பணிகள் இந்த பணிப்புறக்கணிப்பால் பாதிப்படைந்துள்ளன. பெருமளவான கொள்கலன்கள் துறைமுகங்களில் தேங்கிக்கிடக்கின்றன. இந்த பணிப்புறக்கணிப்பு தொடர்ந்தால் அது அமெரிக்காவின் பொருளாதாரத்தில் 4.5 தொடக்கம் 7.5 பில்லியன் டொலர்கள் வரையிலான பொருளாதார இழப்பை ஒவ்வொரு வாரமும் ஏற்படுத்தும் என Oxford Economics projects என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொருளாதார இழப்பால் ஏற் படும் பணவீக்கம் அமெரிக்க

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# லெபனானில் படை நடவடிக்கை – பல இராணுவத்தினர் பலி

லெபனானில் மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கையை ஆரம்பித்ததுள்ளதாக இஸ்ரேல் கடந்த செவ்வாய்க்கிழமை (1) தெரிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை(2) இஸ்ரேலிய படையினர் மீது ஹிஸ்புல்லாக்கள் மேற்கொண்ட தாக்குதலில் பெருமளவான படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது தரப்பில் கப்டன் தர அதிகாரி உட்பட 8 இராணுவத்தினர் பலியானதாகவும், மேலும் 10 பேர் காயமடைந்துள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஹிஸ்புல்லாக்களின் 200 இற்கு மேற்பட்ட இலக்குகள் தாக்கப்பட்டதாகவும் 15 பேர் பலியானதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

எனினும் உலங்குவானூர்திகள் மூலம் 40 இற்கு மேற்பட்ட இஸ்ரேலிய படையினர் வைத்திய சாலைகளுக்கு கொண்டு வரப்பட்டதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. 6 இடங்களில் மோதல்கள் இடம்பெற்றதாகவும்



அதில் 14 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதுடன், 60 பேர் காயமடைந்துள்ளதாக ஹிஸ்புல்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து வான் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெறும் தாக்குதல்களில் இதுவரையில் 1276 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 6,000 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே, காசா பகுதியில் கடந்த ஒரு வருடமாக இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இது வரையில் 41.788 பேர் கொல்லப்பட்டும் 96,794 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

# பிரான்ஸ் அதிபரை சந்தித்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர்



கடந்த திங்கட்கிழமை(30) பிரான்ஸ் அதிபரைசந்தித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தேவால் ரஸ்ய மற்றும் உக்ரைன் அதிபர்களுடன் இந்திய பிரதமர் மேற்கொண்ட பேச்சுக்கள் தொடர்பான விடையங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியை இந்தியா மேற்கொண்டு வருகின்றது. அதற்கான நடவடிக்கையாகவே நரேந்திர மோடி உக்ரைன் அதிபரை சந்தித்திருந்தார். அஜித் தேவாலும் கடந்த மாதம் ரஸ்யாவுக்கு சென்று ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டினையும் சந்தித்திருந்தார்.

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் இந்தியா முக்கிய பங்காற்ற முடியும் என பிரான்ஸ் நம்புகின்றது என இந்திய நாளோடான ஹிந்துஸ்த்தான்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அவுஸ்திரேலியாவில் ஈழத்தமிழர் நகரசபை உறுப்பினராக தெரிவு

அவுஸ்திரேலியாவின் கம்பர்லான்ட் பகுதியில் உள்ள Wentworthville தொகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற தேர்தலில் ஈழத்தமிழரான சுஜன் செல்வன் வெற்றிபெற்றுள்ளார்.

இந்த வெற்றி தொடர்பில் சுஜன் தெவித்துள்ளதாவது:

நான் Wentworthville தொகுதியில் Cumberland கவுன்சில ராக உங்களது புதிய கவுன்சிலராக அதிகாரப்பூர்வமாக தேர்வு செய்யப்பட்டதை அறிவிக்க மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! மேலும், நான் Cumberland கவுன்சிலில் முதல் தற்காலிக Greens கவுன்சிலராக தெரிவு செய்யப்பட்டு பெருமைப்படுகிறேன்! நாங்கள் சாதித்துவிட்டோம்! என் ஆதரவாளர்கள், தன்னார்




வலர்கள் மற்றும் நமது சமூகத்திற்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கான எங்கள் பார்வையில் நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் என் பெரும் நன்றி! உங்கள் வாக்குகள் வெற்றியை தீர்மானித்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## 13வது திருத்தம் குறித்து அநுரவுடன் ஜெய்சங்கர் பேச்சு

### இந்திய வெளிவிவகார அமைச்சு



இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் இலங்கை ஜனாபதியுடன் அரசியலமைப்பின் 13 வதுதிருத்தம் மீனவர்கள் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார் என இந்திய வெளிவிவாகர அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஐக்கியம் ஆள்புல ஒருமைப்பாடு இறைமை ஆகியவற்றை பேணும் அதேவேளை தமிழர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரினதும் சமத்துவம் நீதி கௌவரம் சமாதானம் ஆகியவற்றிற்கான அபிலாசைகளிற்கு இந்தியா ஆதரவளிக்கின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார் என இந்திய வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமைப்பின் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும், மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்துவதும் இந்த நோக்கங்களை அடைய உதவும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளது

மேலும் 'தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்கள் குறித்த இந்தியாவின் கரிசனையை வெளியிட்டார், அவர்களையும் அவர்களின் படகுகளையும் கூடிய விரைவில் விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தியுள்ளார், மேலும் அவர்களிற்கு எதிராக பெரும் அபராதத்தை விதிப்பதை மறு பரிசீலனை செய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்' என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் கூட்டாக இணையாது விட்டால் வாக்குகள் சிதறப்படும்




தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் கூட்டாக இணையாத சந்தர்ப்பத்தில் வாக்குகள் சிதறப்படும் என சுட்டிக்காட்டிய,வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, இதனால் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்கள் குறைவடைவதுடன், திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங் களை இழக்கவேண்டி நேரிடும் என எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு கிழக்கு ஒருங்கிணைப் புக் குழுவின் மாவட்ட தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில், இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி, எமது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவானது 2022 கார்த்திகை எட்டாம் திகதி சமஸ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டிருந்தது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

இலக்கு

## ஈழத்தமிழர் இறைமை புல் அல்ல சிங்களவர் இறைமை நெல் அல்ல

"நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் - புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்று ஔவையார் மூதுரையில் கூறிய பாடல் வரிகள் தான் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் ஈழத்தமிழர்களின் இறைமை குறித்து கொண்டுள்ள மனநிலையை விளக்கும் சிறந்த வரிகளாகின்றன. நீங்களே ஈழத்தமிழர் இறைமையைப் புல்லாகவும் சிங்களவர் இறைமையை நெல்லாகவும் உலகுக்குக் காட்டி நெல்லுக்கு இறைப்பதில் உங்களுடைய கட்சிகள் என்னும் வாய்க்கால்கள் வழி புல்லுக்கும் பொசிய வைக்க முயற்சிக்கும் முட்டாள்களாக உள்ளீர்கள் என்பதையே சிறிலங்காவின் 9வது அரசத்தலைவராக அநுரகுமரா திசநாயக்கா தெரிவானதன் பின்னர் வடக்கு கிழக்கில் உங்களின் பேச்சுக்களும் செயல்களும் உலகுக்கு வெளியாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இலக்கு உங்களின் முகங்களில் அடித்துச் சொல்ல முனைகிறது.

1910 இல் பிரித்தானியக் காலனித்துவம் அறிமுகப்படுத்திய "படித்தோர் குழாத்து சனநாயகம்" தான் இலங்கைத் தீவின் அத்தனை பிரச்சினைகளுக்கும் குறிப்பாக ஈழத்தமிழருடைய இறைமை நீக்கத்துக்கும் தேசிய நீக்கத்துக்கும் இன்று வரை 114 ஆண்டுகள் மூலகாரணமாகவுள்ளது. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் ஒவ்வொரு ஈழத்தமிழரும் வாழ்ந்து வருகின்றனர். எல்லா மக்களது உயிர்-உடைமை-நாளாந்த வாழ்வு இழப்புக்களை தடுக்கத் தங்கள் உயிர்களையே அர்ப்பணித்த மண் ஈழத்தமிழர் தாயகம். இங்குமண்ணைப் பற்றி அக்கறையில்லா மக்களைப் பற்றி அக்கறையில்லத நிலையில் தங்கள் விருப்புக்குத் தீர்மானங்கள் எடுக்கும் படித்தவர்க்குப் பிரதிநிதித்துவம் சொத்துடைமையுள்ளவர்களுக்குப் பிரதிநிதித்துவம். என்கின்ற அடிப்படையில் மக்கள் இறைமை மறுக்கப்பட்டுக் குழுநிலை இறைமையும் மக்கள் தீர்மானமெடுக்கும் பலம் சிதறடிக்கப்பட்டு சிலர் பலருக்காக முடிவெடுக்கும் மேலாண்மை நிலைகளும் இன்றும் தொடர்கிறது.

இந்நிலை இனியும் வேண்டாமெனச் சிங்கள மக்கள் அநுரகுமார திசநாயக்கா என்னும் சாதாரண மனிதன் ஒருவரை ஜனாதிபதியாக்கியதன் மூலம் புரட்சிகரமான அரசியல் அதிகார மாற்றத்தை-வர்க்கநிலை ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். இதனை அவர்கள் எப்படிச் செய்தனர் சிங்கள தேசத்திலும் உலகெங்கும் உள்ள சிங்களவர் இடையிலும் உள்ள துறைசார் அறிவினை இணைத்தார்கள், உழைப்பை சமுக மூலதமனாக்கினார்கள் இவ்விதம் உண்மையாகவே தங்கள் தன்னலத்துக்குப் படிப்பைப் பணத்தைச் செல்வாக்கைப் பயன்படுத்தாத சிங்களவர்களின் தொகுதியொன்றை இலங்கைத் தேசிய மக்கள் சக்தி உருவாக்கித்தான் இதனை அடைந்துள்ளது என்பது ஆய்வாளர்கள் முடிபு.

ஈழத்தமிழரம் படித்தோர் குழாத்து சனநாயகத்தின் பாராளுமன்றக் கொடுங்கோன்மைப் பிடியிலிருந்து ஈழத்தமிழர் தங்களையும் விடுவித்து தங்களுடைய மக்கள் இறைமையின் அடிப்படையில் தங்களுடைய சனநாயகப் பங்களிப்புக்கான புதிய மாற்றத்தை ஏற்படுத்தவே ஈழத்தமிழரிடையிலும் பொதுவேட்பாளர் நியமனம் சிறிலங்காவின் 9வது சனாதிபதி தேர்தலை நமக்கு நாமே வாக்களித்துப் புறக்கணிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரே அலகு ஈழத்தமிழர் தாயகம் என்பதை உறுதிப்படுத்தி முன்னாள் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் அவர்கள் தன்னை தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அல்ல ஈழத்தமிழர் தங்கள் இறைமையின் அடிப்படையிலான தன்னாட்சி உரிமையை பயன்படுத்தி வாழ இயலாத எந்தச் சிங்கள பௌத்த மேலாண்மை ஆட்சிகளையும் அதன் ஆட்சித் தலைவரைத் தெரிவு செய்யம் தேர்தலையும் நிராகரிக்கின்றோமெனச் சிங்கள தேசத்துக்கும் அனைத்துலகுக்கும் பிரகடனப்படுத்த சனநாயகப் போராட்டத்துக்கான சின்னமாக தன்னைப் பொதுவேட்பாளராக ஈழத்தமிழர் முன் நிறுத்தினார். சிங்கள தேசமும் அனைத்து உலகமும் ஈழத்தமிழரின் தனித்துவமான அரசியல் அடையாளத்தைக் கண்டு கொண்டது. இதன்வழி ஈழத்தமிழரும் தங்கள் அரசியலில் புதிய மாற்றத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி பாராளுமன்றத் தேர்தலை நவம்பர் 14ம் திகதி நடாத்தி தான் நிர்வாக நிலையில் தொடங்கியுள்ள ஆட்சிக்கான சட்டவாக்க அதிகாரத்தையும் தனது கட்சிக்குப் பெறுவதற்கு முனைந்துள்ளார். இதற்காக அவர் சிங்கள மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் சிலவற்றை நடைமுறைப்படுத்தியும் காட்டியுள்ளார். இதனை அடுத்து இந்திய சீன அமெரிக்க பிரித்தானிய யப்பான் இரஸ்ய கியூபா கொரியா அவுஸ்திரேலிய தூதுவர்கள் என பெரும்பாலான நாடுகளின் இலங்கைத் தூதுவர்கள் புதிய அரச அதிபருக்கான வாழ்த்துக்களையும் தங்கள் நாடுகளின் முழு அளவிலான ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்தியதுடன் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபை இணைப்பாளரும் அனைத்துலக நாணய நிதியத்தின் பிரதிநிதிகளும் புதிய அரசத்தலைவருடன் தங்களது நிலைப்பாடுகள் குறித்த உரையாடல்களைத் தொடங்கியுள்ளனர். அத்துடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் முனைவர் ஜெயசங்கர் சுப்பரிமணியம் அவர்கள் இம்மாதம் 4ம் திகதியில் இருந்து இலங்கையில் தனது உத்தியோகபூர்வமான பயணத்தையும் ஆரம்பித்துள்ளார்.

இவற்றையெல்லாம் பார்க்கும் சிலர் தேசிய மக்கள் சக்தியின் கொள்கையும் புதிய ஜனாதிபதியின் கோட்பாடும் சிங்களவர்க்குரிய நாடு சிங்கள இனத்துக்குரிய நிலம் பௌத்த ஆகமத்துக்கும் சிங்கள மொழிக்கும் முன்னுரிமையுள்ள சட்டத்தின் முன் அனைவரும் சமனற்ற நாடு என்ற 1956ம் ஆண்டு முதலான நிலைப்பாட்டில் நின்றபடியே சிங்களவர்களுக்கான சமுக பொருளாதார அரசியல் மாற்றங்களை செய்ய முனைகிறார் என்பதே உண்மை என்கின்றனர். சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாட்டில் மாற்றம் இல்லாமலே மகிந்த சிந்தனையான இலங்கைத் தீவில் அனைவரும் சிறிலங்காவினர் என்ற கொள்கை அடிப்படையினை மீளுறுதி செய்கின்றார். கோத்தபாய சிந்தனையான இனப்பிரச்சினையொன்று இங்கில்லை எம்மைத் தெரிவு செய்த சிங்கள பௌத்தர்களுக்கே நாம் பணி செய்வதற்கு உரியவர்கள் என்ற கோட்பாட்டுடன் எந்தப் புது அரசியலமைப்பும் சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்படுமெனவும் பொலிஸ் அதிகாரமற்ற, நில அதிகாரமும் தீர்மானிக்கப்பட வேண்டிய, தங்களால் நீதிமன்றத்தில் வழக்காடி வடக்கு கிழக்குத் தனியான அலகுகள் என்று பிரிக்கப்பட்ட 13ம் திருத்தத்தைக் கொண்ட மாகாணசபை வழங்கப்படலாம் என்ற எடுத்துரைப்புடனும் பொதுத்தேர்தலை எதிர்கொள்ளுகின்றார். ரணிலின் சிந்தனையான வடக்கு கிழக்கு வாழ் தமிழர் இறைமையற்ற குடிவரவுச் சமுகத்தினர் அவர்களுக்கான தனிப்பட்ட உதவிகளை வழங்கி அவர்களின் மனித வலுவையும் நில கடல் வளங்களையும் சிறிலங்காவின் பொருளாதாரத் தேவைக்குச் சந்தைப்படுத்தல் என்பதில் எந்த மாற்றமும் இதுவரை பேசப்படவில்லை. அத்துடன் இலங்கை முழுவதும் சிங்கள பௌத்த குடியேற்றங்களுக்குரியது என்பதிலோ அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்தோ எந்த மாற்றும் இதுவரை கூறப்படவில்லை.

இந்நிலையில் அநுர குமார திசநாயக்காவுக்கான ஆதரவை வடக்கு கிழக்கில் பெருக்கி சுமந்திரன் நேரடியாக சஜீத்துக்கு வாக்களிக்கச் சொன்னதால் ஈழத்தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு அரசத்தலைவர் தேர்தலில் குறைவான வாக்குகளைப் பதிவு செய்தமையை மாற்ற வேண்டுமென்று வடக்கு கிழக்கில் ஒரு தரப்பினர் வேமாகச் செயற்படத் தொடங்கியுள்ளனர். சில தரப்பினர் நேரடிக் கூட்டு மறைமுகக் கூட்டுகளுக்கு புதிய சனாதிபதியுடன் உரையாடல்களைத் தொடங்கியுள்ளனர். இதற்கிடை பல கட்சிகளாகச் சுயேட்சைக்குழுக்களாகத் தேர்தலில் போட்டியிட்டு தேசிய பட்டியலில் ஒரு இடமாவது எடுக்கச் சிலர் முனைகின்றனர். இவை எல்லாமே தங்கி வாழும் மனநிலையில் தாங்கள் இறைமையுள்ள மக்கள் என்பதை ஈழத்தமிழர்களை மறக்கவைத்து ஈழத்தமிழர் இறைமை நீக்கத்தையும் தேசிய நீக்கத்தையும் தமிழர்களே செய்கின்ற செயலாக உள்ளது என்பதே இலக்கின் கருத்து எனவே இலங்கையின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர அம்பிகா சற்குணநாதன் அவர்கள் சிவில் சமுகத்தில் சிலர் புதிய ஜனாதிபதியை விமர்சிக்கக் கூடாது. அது அவரைப் பலவீனப்படுத்தும். அவருக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்கின்றனர். இவர்கள் அவரின் தவறுகளை நியாயப்படுத்தும் அல்லது அலட்சியம் செய்யும் நிலையை உருவாக்கி அவரை மீண்டுமொரு ராசபக்சாவாக மாற்றிவிடுவர் எனக் கூறியள்ளமை முக்கியமாக ஈழத்தமிழர்களால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமென்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது. அத்துடன் அவர் கூறியுள்ள மற்றொரு கருத்தான புதிய ஜனாதிபதி தமிழர்களின் நம்பிக்கையை வெல்ல விரும்பினால் சிங்கள பௌத்த பேரினவாதம் பேசுபவர்களுக்கான அவரின் கூட்டையும் ஆதரவையும் விலக்க வேண்டும். இது நடைபெறுமா? பேரினவாத அலைகள் ஓய்ந்து நல்லிணக்க நீராடுவது அநுரா அவர்களுக்கு ஆகக் கூடிய காரியமா? என்பதே இலக்கின் கேள்வி.

**ஆசிரியர்**

# இந்தியாவை எவ்வாறு கையாளப்போகிறார் அநுர?



அகிலன்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட போது அரசியல் ஆய்வாளர்கள், இராஜதந்திரிகள் மத்தியில் எழுந்த பிரதான கேள்வி, இந்தியாவை இவர் எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதுதான். இந்தக் கேள்வி எழுந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. அது ஜே.வி.பி.யின் கடந்த கால வரலாற்றுடன் தொடர்புபட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவைக் கையாள்வது என்பது முக்கியமானது. மறுபுறத்தில் இந்தியாவுக்கும் இலங்கை முக்கியமானது. ஏதோ ஒருவகையில், இலங்கை தன்னுடைய ஆளுகைக்குள் இருக்க வேண்டும் என்பதில் அக்கறைகாட்டும் ஒரு நாடாகவே இந்தியா உள்ளது. "அண்டை நாடுகளுக்கு முதலிடம்" என்று இந்தியா பெருமையுடன் சொல்லிக்கொள்ளும் அதனுடைய வெளியுறவுக் கொள்கையின் உள்ளார்ந்தமும் அதுதான்!



இந்தப் பின்னணியில்தான் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் சில மணிநேர விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு வந்தார். நண்பகல் கொழும்பு வந்திறங்கிய ஜெய்சங்கர் ஆறு சந்திப்புக்களை அவசரமாக நடத்திவிட்டு இரவே புதுடில்லி திரும்பிவிட்டார். தமிழ்க் கட்சிகளையும் அவர் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவரது அவசரமான நிகழ்ச்சி நிரலில் தமிழ்க் கட்சிகளைச் சந்திப்பதற்கு நேரம் இருக்கவில்லை. அல்லது - தேவை இருக்கவில்லை என்றும் சொல்லலாம்.

தேசிய மக்கள் சக்தி என்பது ஜே.வி.பி.யின் மற்றொரு வடிவம்தான். ஜே.வி.பி.யில் அரசியல் படித்தவர்தான் அநுரகுமார. இப்போது அவர்கள் அதிகாரத்துக்கு வந்திருப்பதையிட்டு புதுடில்லி பதற்றமடைவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஜே.வி.பி.யின் ஸ்தாபகர் றோஹண விஜயவீர இலங்கை சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்துதான் அரசியலுக்கு வந்தவர். ஜே.வி.பி.யின் வளர்ச்சியில் சீனாவின் ஆதரவு இருந்துள்ளமை இரகசியமானதல்ல.

ராஜபக்ஷக்களின்ஆட்சிக்காலத்தில்இந்தியாவுக்கு கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனையத்தை கொடுக்க முற்பட்ட போது கிளர்ந்தழுந்து, அதனைத் தடுத்து நிறுத்திய ஜே.வி.பி.யும் அதன் ஆதரவுடன் செயற்படும் தொழிற்சங்கங்களும், கொழும்பு முறைமுக நகரத்தையும், அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் சீனாவுக்கு கொடுத்த போது மௌனமாக இருந்தன. ஆக, ஜே.வி.பி. என்பது சீனாவுக்கு சார்பான ஒரு அமைப்பாகவே அடையாளம் காணப்பட்டிருந்தது.



இந்தியாவுக்கு சூழவுள்ள நாடுகள் அனைத்தும் சீனாவின் செல்வாக்குக்கு உட்பட்டவையாக மாற்றமடைந்துவரும் நிலையில், இலங்கையும் அவ்வாறு சென்றுவிடுமா என்பது இந்தியாவின் பதற்றத்துக்கு முதலாவது காரணம். இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் தென்முனையத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்தில் இலங்கை அமைந்திருக்கின்றது. ஏற்கனவே, கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம்என்பனசீனாவால்குத்தகைக்குஎடுக்கப்பட்டவையாக உள்ள நிலையில், சீன ஆதரவு ஆட்சி ஒன்று இலங்கையில் உருவாகுவது புதுடில்லியைக் குழப்பும் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான்.

ஜே.வி.பி.யின் வரலாற்றைப் படிக்கும் போதுஇன்னும்இரண்டுவிடயங்கள்இந்தியாவுக்கு நெருடலாக இருக்கும். 1971 இல் இலங்கையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முதலாவது கிளர்ச்சியை ஜே.வி.பி. மேற்கொண்டது. இதற்காக இரகசியமாக ஆட்சேர்ப்பை அவர்கள் மேற்கொண்ட போது, கிளர்சியாளர்களை அரசியல் மயப்படுத்துவதற்கான ஐந்து வகுப்புக்களை அவர்கள் நடத்தினார்கள். அதில் ஒரு பகுப்பு "இந்திய ஆக்கிரமிப்பு" என்ற தலைப்பில் இடம்பெற்றது. ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்பு அதிலிருந்துதான் ஆரம்பமாகின்றது.

1983 ஜூலை தமிழனப் படுகொலைகளைத் தொடர்ந்து ஜே.வி.பி. தடை செய்யப்பட்டது. அதன் பின்னர் இரகசியமாகச் செயற்பட்டுவந்த ஜே.வி.பி.யினர், 1987 இல் இந்தியப் படை இலங்கைக்கு வந்த காலத்தில் தமது இரண்டாது கிளர்ச்சியை நடத்தினார்கள். திருமலையில், இந்தியப் படையினர் மீது கூட அவர்கள் மறைந்திருந்து தாக்குதலை நடத்தியதாக தகவல்கள் உள்ளன. அவர்களுடைய இந்த இரண்டாவது கிளர்ச்சியின் போதும் இந்திய எதிர்பு என்பதுதான் பிரதானமாக முன்னிறுத்தப்பட்டது.

ஆக, ஜே.வி.பி.க்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. ஒன்று சீன சார்ப்பு. இரண்டு இந்திய எதிர்ப்பு!

அநுரகுமார திசாநாயக்கவைப் பொறுத்தவரையில் இந்தக் கிளர்ச்சிகளில் அவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டவரல்ல. ஆனால், அநுர குமார திசநாயக்கவை பின்னின்று இயக்கும் ரில்வின் சில்வா போன்ற சிலர் ஜே.வி.பி.யின் பழைய வரலாற்றுடன் தொடர்புபட்டவர்கள். அதேவேளை, ஜே.வி.பி.யும், தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் இப்போது செயற்பட்டுவருகின்றது. அதனால், அவர்கள் தமது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து மாறிவிட்டார்களா என்பதை இப்போதே சொல்லிவிட முடியாது.

இந்தியாவின் பதற்றத்துக்கு இவைதான் காரணம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அரகலய என்று சிங்கள மக்களின் கிளர்சியைப் பயன்படுத்தி ஜே.வி.பி. தமது ஆதரவுத் தளத்தை அதிகரித்துக்கொண்டுள்ளது என்பதை புதுடில்லி கடந்த வருடமே அடையாளம் கண்டிருந்தது. இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒரு சக்தியாக ஜே.வி.பி. வளர்சியடைந்திருந்த நிலையில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் ரணில் விக்கிரமசிங்க ஒத்தி வைத்தார்.

கடந்த பெப்ரவரியில் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான ஒரு குழுவினரை இந்தியா அழைத்திருந்தது இந்தப் பின்னணியில் தான். இந்த அழைப்பின் பின்னணியில் இரண்டு - மூன்று நோக்கங்கள் இருந்தன. முதலாவது ஜே.வி.பி. தலைமையுடன் நல்லுறவை ஏற்படுத்துவது. இரண்டாவது இந்தியா தொடர்பான அவர்களுடைய அணுகுமுறை எவ்வாறுள்ளது என்பதை நாடி பிடித்துப் பார்ப்பது. மூன்றாவது இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்த்துவது.

ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் இந்தியாவால் கொடுக்கப்பட்ட இந்த அங்கீகாரத்தை உள்நாட்டில் தமது செல்வாக்கை மேலும் அதிகரிப்பதற்கு அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். அதிகாரத்தைப் பெறப்போகும் ஒரு கட்சிக்கு இது தேவையானதாகவும் இருந்தது. சர்வதேச உறவுகளையும் கையாளக்கூடிய ஒருவர்தான் அநுரகுமார என்ற பிம்பத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த அந்த விஜயம் அவர்களுக்கு உதவியது.

ஜனாதிபதியாக அநுர தெரிவாகிய உடனடியாக அவரைச் சந்தித்த கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வாழ்த்துக்களைத் தெரிவித்தது டன், இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு ஒன்றையும் விடுத்தார். இப்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் அநுரவைச் சந்தித்து டில்லி வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை கையளித்திருக்கின்றார். அநுரவைச் சந்தித்த முதலாவது வெளிவிவகார அமைச்சர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களை சிங்களக்கட்சிகள் உள்வாங்குவது ஆபத்தா?

**கடந்த மாதம் நடைபெற்ற இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசநாயக்க வெற்றி பெற்று ஜனாதிபதியாகியுள்ள நிலையில், தற்போது 10ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.**

**இந்த நிலையில், வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் இந்த நாடாளுமன்றத்தேர்தலில் என்ன முடிவை எடுத்து போட்டியிடப் போகின்றன என்பது குறித்து பல்வேறு கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களை சிங்களக்கட்சிகள் உள்வாங்கும் எனவும் பேசப்படுகின்றது. இது தொடர்பில் சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் இராமு மணிவண்ணன் அவர்களின் கருத்து....**



பேராசிரியர் இராமு மணிவண்ணன்

இலங்கையில் நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழ் மக்கள், எத்தகைய ஒரு உள்வாங்குதல் அதோடு இந்த தேர்தலை அவர்கள் பார்க்கின்ற விதம், அது மட்டுமல்லாமல் இந்த தேர்தலின் ஊடாக எத்தகைய ஒரு அரசியல் மாற்றங்கள் ஏற்படலாம் என்பது முக்கியமாக பார்க்க வேண்டும்.

*01-* என்னுடைய பார்வையைப்பொறுத்தமட்டில், ஈழத்தமிழர்களுக்கான ஒருதலையாய பிரதிநிதித்துவம் இல்லாத வரையில், இந்த நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் சரி தமிழ் மக்களுடைய உணர்வுகளையும் அவர்களுடைய உரிமைகளையும் புரிந்து கொள்ளத்தக்க பிரதிநிதிகள் இல்லாத வரையில், இந்த நாடாளுமன்றத் தேர்தல் என்பது கடந்த தேர்தல்களைப் போலத்தான் இது கடந்து செல்லும்.

*02-* இன்றைய சூழலில் வடக்கு கிழக்கு என்று பரவலாக உள்ள தமிழ்க்கட்சிகளில் மக்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கின்ற பிரதிநிதிகள் இல்லை. அண்மையில் மூன்று வருடங்களுக்கு முன்பு என்று சொல்லக்கூடிய ஒரு காலகட்டத்தில் மிகப்பெரிய ஒரு விரிசலையும் அதோடு மட்டுமல்லாமல் தமிழ் அரசியல்கட்டமைப்புகள் என்பது சிறிது சிறிதாக விலகிச் சென்று கொண்டிருக்கின்றதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த காலத்தில் தமிழ் அமைப்புகள், தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஒன்றாக செயற்பட்டன என்றுநான் சொல்லவில்லை. ஒரு அரசியல் ரீதியான தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற ஒரு கூட்டமைப்பு இருந்த காலத்திலும் கூட ஒருமாற்றுக் கருத்துக்களும் மாற்று அரசியல் சக்திகளும் இயங்கியது என்பது வரலாற்று உண்மை. ஆனால் அத்தகைய ஒரு தமிழ் தேசிய கூட்டமைப்பில் கூட தற்போது ஒருங்கிணைந்த பார்வை என்பது இல்லாமல் இருக்கும் பொழுது, எவ்வாறு இந்த நாடாளுமன்ற தேர்தல் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களுடைய கருத்துக்களையும் அவர்களுடைய உணர்வுகள், உரிமைகளை அவதானிக்கக்கூடிய பிரதிநிதிகள், கட்சிகள் செயல்பட முடியும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

*03-* இலங்கையில் இருக்கின்ற பெரும்பான்மைக் கட்சிகள் ஒரு கூட்டணி அமைத்து அதன் ரீதியாக தமிழ் பிரதிநிதிகளை உள்வாங்கக் கூடும். கூட்டணி என்று சொல்லும்பொழுது, கூட்டணி கட்சிகளான தமிழ் தேசியகூட்டமைப்பிலேயே இருந்து பிரிந்து சென்ற பல அமைப்புகளாக இருக்கலாம். அதேபோல் பல முக்கியமானதலைவர்களாக இருக்கலாம். அவ்வாறானவர்களை தங்களுடைய கூட்டணியில் அழைத்துக்கொள்ளுதல் அல்லது ஒரு ஒப்பந்தம் அதாவது தேர்தல் ரீதியான சமரச உடன்படிக்கைகளை மேற்கொண்டு அதன் ரீதியாக தேர்தலை சந்திப்பது போன்ற செயற்பாட்டை செய்யலாம்.

இவ்வாறான ஒரு நிலை, சிங்கள பெரும்பான்மை சார்ந்த கட்சிகளுக்குத்தான் சாதகமாக போகுமே ஒழிய, அது தமிழ் அமைப்புகளுக்கும்தமிழ்கட்சிகளுக்கும்அல்லதுதமிழ்தலைவர்களுக்கும் இது மிகப்பெரிய ஒரு வெற்றியாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. ஆதலால் இலங்கை அரசியலில் நடந்திருப்பது மிகப்பெரிய ஒரு மாற்றம். ஜேவிபி என்ற ஒரு அமைப்பின் சார்பாக அனுராக் குமார் திசநாயக்க அவர்கள் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளார். ஜேவிபி மக்கள் தளத்தில் ஒரு வலிமையான சக்தியாகவும் இயக்கமாகவும் திரும்பவும் அவர்கள் வந்திருப்பது ஒரு பாராளுமன்ற அரசியல் ரீதியாக கவனிக்கப்பட வேண்டியது. அதே சமயத்தில் இலங்கையின் எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாசா போன்றவர்கள் தலைமையிலான கட்சிகள் கூட தமிழ் மக்களிடையே கடந்த ஜனாதிபதி தேர்தலில் மிகப் பிரதானமான வாக்குகளை பெற்றிருந்த ஒரு சூழலில் சஜித் கட்சி மற்றும் அவர்களை சார்ந்த ஒரு அமைப்புகள் பெருமளவிற்கு ஈழத் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளிலும் ஒரு கூட்டணி அல்லது அரசியல் தேர்தல் களத்தில் ஒரு உடன்படிக்கை மேற்கொண்டு அதன் ரீதியாக பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று நான் நினைக்கின்றேன். இது வந்து தமிழர்களுடைய பிரதிநிதித்துவம் என்று சஜித் பிரேமதாசா கட்சியின்ஊடாக இருப்பதற்கானவாய்ப்புகள்பிரகாசமாக இருக்கின்றன. அதேபோல் தமிழ் மக்கள், ஜேவிபிக்கு உடனடியாக பெருமளவிற்கோ அல்லது ஒரு சாதாரண சூழலில்சென்று அவர்களோடு இணைவதும் இணைந்து அவர்களுடைய தேர்தல் களத்தில் இருப்பதும் இன்றைக்கு அதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாக இருக்கின்றன.

*04-* மக்கள் தளத்தில் ஒரு தேர்தல் அரசியல் என்பதை சொல்லும் பொழுது, நாம் இப்பொழுது கூட ஒரு சிதறிய தேங்காய் துண்டுகளாகத்தான் அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆதலால் இப்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பு போன்று அல்லது அதையும் கடந்து ஒரு தேசிய கூட்டமைப்பு, ஈழத்தமிழர் தேசிய கூட்டமைப்புக்கான கட்சிகளை ஒருங்கிணைத்து அனைத்துக் கட்சிகளும் தங்களுடைய ஒரு பிரதான கட்சியை உருவாக்க வேண்டும், தமிழ் அமைப்புகளைப் பொறுத்தவரையில் குறைந்தபட்ச உடன்படிக்கை, அதாவது குறைந்தபட்ச உடன்படிக்கை என்பது 13வது சட்ட திருத்திருத்தம் வேண்டுமா? தனிநாடு வேண்டுமா? அதற்கான சாத்தியக் கூறுகள் என்ன? அல்லது இப்பொழுது அரசியல் உடன்படிக்கையின் படி அதிகார பகிர்வுகளை ஏற்றுக்கொள்ளலாமா? இத்தகைய ஒரு குறிப்பிட்ட அடிப்படையான கருத்துக்களை மையமாகக் கொண்டு ஒரு உடன்படிக்கை ஏற்படுமேயானால் தமிழ்கட்சிகளுக்கு அதை தனித்துவம் பெறத்தக்க ஒரு பாதையை உருவாக்கிக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

மக்களை பொறுத்தவரையில் இந்த கட்சிகளையும் தலைவர்களையும் பிரதானமான வேட்பாளர்களையும் கலந்து மக்கள் மத்தியில் இருக்கின்ற கருத்துக்களுக்கு அதை வெளிப்படுத்தக்கூடிய திறன் வாய்ந்த அமைப்புகள் கிடையாது என்று தான் நான் நினைக்கின்றேன்.

• • •

# பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரம்: தமிழர்களின் மண்டைகளை கழுவும் செயற்பாடுகளும் ஆரம்பம்

இலங்கையின் பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் மிக விரைவாக முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. வடக்கு கிழக்கில் வாக்கு அரசியலை மையப்படுத்திய வகையில் தமிழர்களின் மண்டைகளை கழுவும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்திற்காகவும் சுயநிர்ணய உரிமைகளுக்காகவும் தமிழர்களின் தாயக கனவிற்காகவும் போராடுவதாக கூறுகின்றவர்கள். இன்று இலங்கையின் பாராளுமன்ற கதிரைகளை பிடித்துக்கொண்டு அதில் வரும் சுகபோகங்களை அனுபவிப்பதற்காக தீவிரமாக செயற்பட்டுவருகின்றனர். இவர்களுக்கு எல்லாம் இன்று தேவையாகவுள்ளது தமிழ் தேசிய உணர்வு இதனைபயன்படுத்தி அதிகாரத்திற்கு வருவதற்காக பல்வேறு பிரயத்தனங்களை முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் தமிழர்கள் இன்று முக்கிய காலப்பகுதியில் நிற்கின்றனர். தென்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஒரு பாரிய போராட்டத்தின் விளைவாக ஒரு போராட்ட பின்புலத்தில் தோற்றம்பெற்ற கட்சியொன்று ஆட்சியமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்த நிலையில் கடந்த 35வருடமாக தமது உரிமைகளுக்காக போராடிய தமிழ் மக்கள் இன்று தமது தீர்விற்கான கோரிக்கையினை முன்னிறுத்தியுள்ளனர்.

கடந்த 35வருடத்திற்கு மேலாக போராடிய ஒரு சிங்கள கட்சி அதே கொள்கையுடனும் வீரியத்துடனும் தொடர்ச்சியான பல்வேறு ஜனநாயக ரீதியான போராட்டங்களையும் ஆயுத ரீதியான போராட்டங்களையும் கிளர்சியையும் முன்னெடுத்து இன்று இலங்கையின் ஆட்சி அதிகாரத்தினை பிடித்துள்ளது. சிங்கள மக்களினால் குறித்த கட்சியின் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாத போதிலும் தொடர்ச்சியாக தமது குறிக்கோளில் உறுதியாகயிருந்து ஆட்சி அதிகாரத்தினை பிடித்துள்ளனர்.






ஆனால் இந்த நாடு சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுவரும் ஒரு இனமாக தமிழினம் காணப்படுகின்றபோதிலும் காலத்திற்கு காலம் தமிழர்கள் மத்தியில் தோற்றம்பெற்ற உறுதியற்ற தலைமைகளும் சுயநல அரசியலும் தமிழர்களை ஏனைய இனங்கள் அடக்கியாளும் நிலைக்கு இட்டுச்சென்றது.

இருந்தபோதிலும் தமிழர்கள் மத்தியில் தோற்றம்பெற்ற ஆயுதப்போராட்டம் தமிழர்களுக்கான வலுவான குரலாகவும் தமிழர்களின் நீடித்து நிலைத்த குறிக்கோளையும் கொண்டிருந்த காரணத்தினால் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தினை சர்வதேசமே ஏற்றுக்கொள்ளும் நிலைமைகளும் உருவாகியிருந்தது.

எனினும் சர்வதேசத்தின் வல்லாதிக்க போட்டிகளும் இலங்கையின் சர்வதேச நாடுகளுக்கு தேவையான முக்கியத்துவதும் தமிழர்களின் உரிமைக்கோசத்தினை மறைத்து இலங்கைக்கு உதவும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் யுத்தம் மௌனிக்கப்பட்ட நிலையில் தமிழர்கள் இராஜதந்திர ரீதியிலும் அரசியல் ரீதியாகவும் உறுதியான கொள்ளைகையுடன் தமிழர்களின் போராட்டத்தினை முன்கொண்டுசெல்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இன்று அனைத்தும் கேள்விக்குறியாக்கப்பட்ட நிலைமையிலேயே காணப்படுகின்றது.

**மட்டு.நகரான்**

இந்த நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின்காலத்தில் மட்டும் தமிழர்களின் உரிமைக்கான கொள்கைகளும்கோட்பாடுகளும் உறுதியாக முன்கொண்டுசெல்லப்பட்ட நிலையில் அதன் பின்னரான காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் தேசிய அரசியலானது வாக்கு அரசியலாகவும் சுயநல அரசியலாகவுமே காணப்படுகின்றது. ஆயுதப்போராட்டத்திற்கு முந்திய காலத்தில் இவ்வாறான நிலைமைகள் காணப்பட்டதன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் போராட வேண்டியதுர்ப்பாக்கிய நிலைக்குதள்ளப்பட்டனர்.

அவ்வாறான நிலை இன்று உருவாகியுள்ள போதிலும் இன்றைய நிலையில் தமிழ் இளைஞர்களின் போக்குகளும் எதிர்பார்ப்புகளும் என்பது தமிழர்களின் இருப்பினை எதிர்காலத்தில் கேள்விக்குள்ளாக்கிவிடுமோ என்ற அச்ச நிலைமைகள்காணப்படுகின்றன. இவ்வாறானநிலைமையினை இந்த தமிழர் தேசம் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது என்பதே இன்று உள்ள மிகப்பெரும் சவாலான விடயமாகவுள்ளது.

சிங்கள தேசத்தில் ஊழலுக்கும் அங்கு காணப்பட்ட அடாவடித்தனங்களுக்கும் எதிராக சிங்கள மக்கள் கிளந்தெழுந்து ஆட்சியை மாற்றியுள்ளார்களே தவிர இந்த ஆட்சி மாற்றத்தினால் தமிழர்களுக்கான உரிமையினையோ அல்லது தமிழர்களுக்கான நீதியையோ தேசிய மக்கள் சக்தி போன்ற கட்சிகள் ஒருபோதும் வழங்காது. தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க நியமிக்கப்பட்டது தொடக்கம் இன்றுவரையில் தமிழர்கள் தொடர்பில் எந்த விதமான கருத்துகளையும் தெரிவிக்காத நிலையே உள்ளது. எதிர்வரும் காலத்தில் தேர்தல் நடைபெறவுள்ளதனால் தமிழர்கள் சார்ந்து சில உறுதி மொழிகள் வழங்கப்படலாம். ஆனால் தமிழர்களுக்கான உரிமைசார்ந்த எந்த விடயமும் நடைபெறாது என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும். ஏன் என்றால் சிங்கள தேசத்தின் டிசைன் என்பது அதுதான்.

இந்த டிசைன் தெரியாமல் ஒரு போராட்ட வடிவத்திற்குள் வாழும் மக்களாகவுள்ள தமிழ் மக்கள் மத்தியில் சிங்கள கட்சிகளுக்கு ஆதரவாக எழும் அலையென்பது தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கும். இதனை முளையில் கிள்ள வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் தேசிய சக்திகளுக்கு காணப்படுகின்றது.

இணைந்த வடகிழக்கில் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமானால் இரண்டு மாகாணங்களிலும் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படவேண்டும். இந்த இருப்பு பாதுகாக்கப்படவேண்டுமானால் தமிழர்களின் அரசியல் உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும். வெறுமனே வாக்கு அரசியல்மட்டும் தமிழர்களின் உரிமையினை பாதுகாக்காது என்பதை அனைவரும் உணரவேண்டும்.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் மூவினங்களும் வாழும் பகுதியாகவுள்ள போதிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நிலையில் அரசியல் என்பது கேள்விக்குறியாகியே வருகின்றது. இலங்கையின் தேர்தல் முறைமையினால் கிழக்கில் தமிழர்கள் அரசியல் ரீதியாக பின்னடையும் நிலையே காணப்படுகின்றது. கிழக்கில் அனைத்து தமிழ் தேசிய அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்படும் காலங்களில் எல்லாம் பிரிந்துநின்று செயற்பட்ட காரணத்தினாலும் சுயநல அரசியல், வாக்கு அரசியல் காரணமாகவும் கிழக்கில் தமிழ் தேசிய அரசியல் கேள்விக்குள்ளாகி ஒட்டுக்குழுக்களும் அரசாங்கத்தினை ஆதரிக்கும் ஊழல்வாதிகளும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து தமிழர்களை விற்றுப்பிழைக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக வடகிழக்கு தமிழ் தேசிய அரசியலை வடக்குடன் மட்டுப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட சிங்கள தேசத்தின் அரசியல் நிரலினை இலகுவாக அமுல்படுத்தும் நிலைமைகள்ஏற்பட்டுவருகின்றது. வடக்கில்தமிழ் தேசிய அரசியல் நிலைபெறும்போது கிழக்கில் கேள்விக்குட்படுத்தப்படுமானால் கிழக்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# காணி அபகரிப்பை தடுக்க கோரும் மக்கள்

ஹஸ்பர் ஏ ஹலீம்

அப்பாவிப் பொது மக்களின் காணிகளை அரச திணைக்களங்கள் கபளீகரம் செய்து எல்லையிடப்பட்டுள்ள நிலையில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வெல்வேரி கிராமத்தினை சேர்ந்த பொதுமக்களும் இது தொடர்பில் தங்கள் ஆதங்கங்களை வெளிப் படுத்தியுள்ளனர். இதற்காக அரசியலமைப்பில் சொல்லப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுக்க மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை அண்மையில் (30.09.2024) பதிவு செய்தனர்.



குறித்த பகுதியில் வசித்துவந்த 31 குடும்பத்தினர்களது 42 ஏக்கர் குடியிருப்புக் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் அந்த காணிகளில் 35 ஏக்கர் காணிப்பகுதியானது பெரும்பான்மையினத்தினை சேர்ந்த தனி நபர் ஒருவருக்கு அரசினால் குத்தகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக குறித்த கிராமத்தவர்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையில் அவர்கள் மீளக் குடியேற முற்பட்டபோது அவர்களது காணிப்பகுதிகளை அரசானது கையகப் படுத்தியுள்ளதை அறிந்த பாதிக்கப்பட்ட மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.



1983ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது தாம் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்ததன் பின்னர் 1990களிலும் இடம் பெயர நேரிட்டதாகவும் அதன் பின்னராக அவர்களது வீடுகள் இருந்த பகுதிகளில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்ததால் அப்போது மீளவும் குடியேற முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதன் பின்னராக வனஜீவராசிகள் திணைக் களம் குறித்த பகுதியில் எல்லையிட்டதன் பின்னராக தற்போது அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு எல்லையிடப்பட்ட பகுதிகள் அரசின் ஆதரவுடன் பெரும்பான்மையினத்தினை சேர்ந்த தனி நபர் ஒருவருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் அது தொடர்பில் பலதரப்பட்ட மட்டங்களில் முறையிடப்பட்டிருந்த போதிலும் தகுந்த பதில் கிடைக்கப்பெறாத நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட வருகை தந்திருப்பதாகவும் இதன்போது அவர்கள் குறிப்பிட்டனர்.




எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் வடக்கு கிழக்கு சிறுபான்மை சமூகத்தின் உரிமைகள் கேள்விக்குறியே. தற்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இது தொடர்பில் தீர்வினை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு மக்களது ஆதரவு குறைவு அது போன்று வாக்குகளும் குறைவாகவே கிடைத்தன. எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை இலக்கு வைத்து களநிலவரம் எப்படி அமையப்போகிறது என்பது பற்றி எம்மால் ஊகிக்க முடியாது .

தேர்தல் கால வாக்குறுதிகளில் ஒன்றாக வேட்பாளர்களால் கூறப்படும் ஒன்று காணி விடுவிப்பு. இது நடந்தால் மகிழ்ச்சி. கிழக்கு மாகாணத்தில் பல ஏக்கர் வயல் நிலங்கள், விவசாய, குடியிருப்பு பூமிகளை தனியாருக்கு சொந்தமானதை எல்லையிட்டு அபகரிப்பு செய்துள்ளனர்.

இவ்வாறான தனியாருக்கு சொந்தமான மக்கள் காணிகளை வனஜீவராசிகள் திணைக் களம், தொல்பொருள் திணைக்களம், இலங்கை துறை முக அதிகார சபை போன்றன கையகப்படுத்தியுள்ளதால் அன்றாட ஜீவனோபாயத்தில் பல்வேறு அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடளித்த ஐயா சாமி கிருஷ்ண ரூபன் இவ்வாறு தெரிவித்தார் " வெல்வேறியன் காணி எங்களுக்கு சொந்தமானது. தற்போது வனத்திணைக்களத்தினர் எல்லையிட்டு எங்களை அங்கு செல்லாது தடுத்து நிறுத்துவதுடன் நில அளவைத் திணைக்களம் பிரதேச செயலகம் ஊடாக தெரியப்படுத்திய போது அது ஹெட்டியாராச்சி என்பவருக்கு சொந்தமான காணி என தெரிவிக்கின்றனர். வனஜீவராசிகள் திணைக்களம் என்று எல்லையிடப்பட்ட போது எப்படி இவ்வாறு கூறுவது . எனவே சட்டரீதியாக பல விடயங்களை செய்தபோதும் தோல்வி கண்டுள்ளோம். இறுதியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புகாரளிக்க வந்தோம் " என்றார்.

இது தவிர திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பகுதியில் சுமார் 2000 ஏக்கர் காணிகள் விகாரைக்காக ஒதுக்கப்பட்டு 31 விகாரைகள் கட்டுமானப் பணிகளுக்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

திரியாய் பகுதியில் 3000 ஏக்கர் மக்களது விவசாய காணிகள் சூறையாடப்பட்டு, அரச திணைக்களங்கள் சில கையகப்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

"1970களில் எங்கள் காணிகளில் குடியிருந்து யுத்த சூழ்நிலை காரணமாக 1977ல் அங்கும் இங்கும் ஓடி இடம் பெயர்ந்த போது மீண்டும் எமக்கு அந்த காணிகளை வழங்காது வனஜீவராசி திணைக்களத்தினர் கையகப்படுத்தியதை அறிய முடிகிறது. எங்கள் பூர்வீக பூமி எங்களுக்கு வேண்டும் " என வயோதிப பெண் ஒருவர் தனது காணி இழந்ததை பற்றி இவ்வாறு விபரித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களது விவசாய காணிகளை கபளீகரம் செய்துள்ளதாகவும் இதனை அரச திணைக்களங்களான தொல்பொருள், வனஜீவராசி, துறை முக அதிகார சபையினர்களே இவ்வாறு அடாத்தாக கையகப்படுத்தியதாகவும் திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அண்மையில் மக்களுடனான சந்திப்பின் போது தெரிவித்தார். ஆனாலும் இதனை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தது பற்றி விபரங்கள் வெளியாகவில்லை. தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் அள்ளி வீசுவார்கள் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

" எங்களுடைய நிலத்தை பெற்றுத் தாருங்கள் தற்போதைய ஜனாதிபதி இலஞ்ச ஊழலற்ற நாட்டை உருவாக்குவதாக கூறுகின்றார்.

எமக்கான காணிகளை பெற்றுத் தாருங்கள். உடனடியாக வனஜீவராசிகள் திணைக் களத்தினரிடத்தில் இருந்து விடுவியுங்கள் " என ஒரு காணி உரிமையாளர் இதன் போது தெரிவித்தார்.

நில அபகரிப்பை நிறுத்தக்கோரிய போராட்டங்கள் வடக்கு கிழக்கில் கடந்த அரசாங்கத்திலும் இடம் பெற்றன. முழுமையான தீர்வு கிடைக்கவில்லை, தற்போதைய அரசாங்கம் இம் மக்களுக்கான தீர்வுகளை முன்வைப்பார்களா என அங்கலாய்க்கின்றனர். தமிழ், முஸ்லிம் சமூகம் காலாகாலமாக பல விவசாய, குடியிருப்பு பூமிகளை இழந்து தவிக்கின்றனர். இந்த அரசாங்கத்துக்கு சிறுபான்மை சமூகமும் ஆதரவளித்திருந்தனர். இருந்த போதிலும் திருப்திப்படக்கூடிய தீர்வு கிட்டுமா என்பது கேள்விக்குறியே .

• • •



# சிம்ம சொப்பனம்

துரைசாமி நடராஜா

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றுள்ளார். இவ்வெற்றி பாரம்பரிய அரசியல் கலாச்சாரத்திற்கு சாவு மணியடித்து அவர் பெற்ற மிகச் சிறந்த வெற்றியாக பதிவாகியுள்ளது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ள இவ்வெற்றியானது பல்வேறு அதிர்வலைகளையும் தோற்றுவித்துள்ளது. அத்தோடு இத்திருப்பு முனையின் தாக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும் என்று நம்பப்படுகின்றது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்ட இவ்வெற்றியின் ஊடாக மலையக அரசியல்வாதிகள் உள்ளிட்ட சிறுபான்மை அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அதிகமுள்ளது. அத்தோடு மலையக இளைஞர்கள் பாரம்பரிய அரசியல் கலாச்சார சாக்கடையில் இருந்து விடுபட்டு புதிய பரிமாணத்தை நோக்கி முன்செல்ல வேண்டிய தேவையையும் ஜனாதிபதி அநுரகுமாரவின் வெற்றி உணர்த்தியுள்ளது என்றால் மிகையாகாது.

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த செப்டம்பர் மாதம் 21 ம் திகதி இடம்பெற்றது. இத்தேர்தலில் எப்போதுமில்லாதவாறு 39 வேட்பாளர்கள் போட்டியிட்டமை ஒரு முக்கிய அம்சமாகும். இந்நிலையில் வாக்குச் சீட்டின் நீளமும் அதிகமாகக்காணப்பட்டது. ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றிருந்த நிலையில் ஒரு கோடியே 36 இலட்சத்து 19 ஆயிரத்து 916 பேர் வாக்களித்துள்ளனர். எனினும் இத்தேர்தலில் 20.54 வீதமானோர் வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு அளிக்கப்பட்ட வாக்குகளில் மூன்று இலட்சத்து 300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இம்முறை ஜனாதிபதி தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கு இடையில் கடும் போட்டி காணப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் இந்நிலை காணப்படவில்லை. தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையிலேயே போட்டித்தன்மை காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. இத்தேர்தலில் சஜித் பிரேமதாச, 45,30,902 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 22,99,767 வாக்குகளையும், நாமல் ராஜபக்ச 3,42,781 வாக்குகளையும் பெற்றுக் கொண்ட நிலையில் அநுரகுமார திசாநாயக்க 57,40,179 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி ஈட்டினார். இது அளிக்கப்பட்ட வாக்குகளில் 42.31 சதவீதமாகும். 'நான் இல்லையென்றாலும் இந்த தேசத்தில் மக்களுக்கு அரசியல் என்றாலே கசப்பாக இருக்கும் ஒரு தருணத்தில் எனது ஜேவிபி சகோதரர் ஒருவர் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவார். அவர் பிறப்பில் செல்வந்தராகவோ பணக்காரராகவோ இருக்கமாட்டார்' என்ற றோஹண விஜேவீரவின் கனவு இப்போது மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.



### அரகலய போராட்டம்

நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழல்கள் அதிகரித்து காணப்பட்டமை,, பொருளாதார நெருக்கீடு, அதிகார துஷ்பிரயோகம் என்பன அதிகரித்து காணப்பட்ட நிலையில் மக்கள் இது தொடர்பில் அதிருப்திக்கு உள்ளாகி இருந்தனர். இதற்கெல்லாம் முடிவாக பாரம்பரிய அரச கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாக இருந்தது. திருடர்களை ஒழித்துக்கட்டி நல்லாட்சியை மலரச்செய்ய வேண்டும் என்பதே மக்களின் எண்ணமாகும்.

கடந்த 2005 ம் ஆண்டு தொடக்கம் 2022 ம் ஆண்டு வரை இடம்பெற்ற ஊழல் நிறைந்த ஆட்சி தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் அவசியத்தை மக்களை உணரச்செய்ததாக புத்திஜீவிகள் வலியுறுத்துகின்றனர். இந்நிலையில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் இதன் தாக்கம் எதிரொலிக்கும் என்பதையும் குறிப்பிட்டாதல் வேண்டும். 2022 இல் இடம்பெற்ற 'அரகலய' இளைஞர் போராட்டத்தையும் தேசிய மக்கள் சக்தி தனக்கு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டது என்பதே உண்மையாகும்.



யார் விரும்புகிறோமோ இல்லையோ எமது நாட்டில் புதியதொரு அரசியல் கள சக்தி விஸ்வரூபமெடுத்து வருகின்றது. தேசிய மக்கள் சக்தி தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக வளர்ந்து வருகின்றது. இச்சக்தியை விடுத்து நாட்டின் எதிர்கால அரசியலை நாம் யாருமே பேச முடியாது. 1971 மற்றும் 88,89 களில் இரண்டு தடவைகள் ஆயுத புரட்சியின் மூலம் ஆட்சியைக் கவிழ்த்து புதியதொரு புரட்சிகர ஆட்சியை ஏற்படுத்த முயன்று படுதோல்வியடைந்த மக்கள் விடுதலை முன்னணியின் புதிய வடிவமே தேசிய மக்கள் சக்தியாகும். ஜனநாயக நீரோட்டத்தில் வந்த அவர்கள் பல ஏற்றத் தாழ்வுகளை இதுவரை இலங்கை அரசியலில் கண்டு வந்தனர். ஆனால் 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளால் ஏற்பட்ட அமைதியான மக்கள் புரட்சி என்பது இவர்களுக்கு பாரியதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்ததெனலாம். வரலாற்றில் முதல் தடவையாக இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் மறக்கப்பட்டு மக்கள் ஒன்றாக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கடந்த கால தேர்தல்களில் 3 அல்லது 4 வீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்த ஒரு கட்சி இரண்டு ஆண்டுகளில் இவ்வாறாக அசுர வளர்ச்சி கண்டு யாவரையும் பிரமிக்க வைத்துள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். ஜனநாயக ரீதியான எந்த மாற்றமும் ஏற்கப்பட வேண்டியதொன்றேயாகும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி எம்.எஸ்.அனீஸ் குறிப்பிடுகின்றார்.

### பேரம் பேசும் சக்தி

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் ஜனாதிபதியாகியுள்ள நிலையில் மலையகத்தின் பிரதான கட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி என்பன முறையே ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோருக்கே ஆதரவு வழங்கியிருந்தன. இதேவேளை இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்கி இருந்தமையும் தெரிந்ததாகும். இந்நிலையில் அநுரவின் வெற்றியைத் தொடர்ந்து மலையக கட்சிகளின் நிலை தற்போது திரிசங்கு சொர்க்கமாகவும், சிம்ம சொப்பனமாகியுமுள்ளது. கடந்த காலங்களில் ஆட்சியில் உள்ள அரசுக்கு ஆதரவு வழங்கி பேரம் பேசும் சக்தியின் ஊடாக மலையக மக்களுக்கு நன்மைகளை பெற்றுக் கொடுக்கும் ஒரு போக்கினை மலையக



கட்சிகள் பின்பற்றின. இதன் மூலம் ஒரு சில நன்மைகளை மக்கள் பெற்றுக் கொண்டனர் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் பேரம் பேசும் சக்தியின் ஊடாக அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டு பல வரப்பிரசாதங்களையும் அனுபவிப்பதிலேயே சிலர் குறியாக இருந்ததாக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# அற்ப நலன்களுக்காக தேசத்தை இழப்போமா?

அரசுத் தலைவர் தேர்தலின் தொடர்ச்சியாகத்தான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தேசிய மக்கள் சக்தியாக அவதாரம் எடுத்துள்ள ஜேவிபி சார்பில் அனுரகுமார திசநாயகா தாம் பெற்றுள்ள வெற்றியை முழுமைப்படுத்திக் கொள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் வென்றாக வேண்டும். அதற்கான சுடர்மிகு வாய்ப்பே தென்படுகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசுத் தலைவர் என்ற முறைமையைக் கைவிட்டு நாடாளுமன்ற ஆட்சி முறையை மீட்போம் என்ற உறுதியைக் காக்கவும் இந்த வெற்றி கட்டாயம் தேவை.

ஏனைய சிங்களக் கட்சிகளால் இவ்வளவு விரைவில் மீண்டெழுந்து அனுரகுமாராவின் வெற்றிப் பயணத்தைத் தடுத்து நிறுத்தி விட முடியாது. ஜேவிபி அல்லாத சிங்களக் கட்சிகள் ஓரணியாகச் சேரவும் வாய்ப்பில்லை. அவற்றில் ஓரிரு கட்சிகள் அனுரகுமாராவிடம் சரணடையவே விரும்பக் கூடும். சிங்கள மக்களின் பொதுவான மனநிலையும் ஜேவிபிக்கு இன்னுங்கூட அமோகமான வெற்றியை வழங்குவதாகவே அமையும் என்பது என் கணிப்பு. ஜேவிபியின் வெற்றியை விரும்பாத அயல் ஆற்றல்களும் கூட உடனடியாக அனுராவிடம் நட்பு பாராட்டவே கைநீட்டும்.

சிங்கள அரசியலில் பழம்பெருச்சாளிகளை வீழ்த்தியவர், ஊழலுக்கு எதிரானவர், ஏழை எளிய மக்களிடம் பரிவு கொண்டவர், அனைத்து மக்கள் ஒற்றுமைக்காக உரக்கப் பேசுகிறவர் என்ற அனுராவின் படிமம் இப்போதைக்குக் கலையக் கூடியதன்று. அவருக்கு வெற்றி தேடித் தந்த ’அறகலய’ மணம் இப்போதும் தென்னிலங்கைக் காற்றில் மிதந்து கொண்டிருப்பதை முகரலாம். புதுத் தாராளிய முதலியச் சூழலில் இறுக்கமான கடன்வலையில் சிக்கியுள்ள நாட்டின் பொருளியலை மீட்கும் முயற்சியில் போகப் போக அனுரா கசப்பான (மக்களுக்குக் கசப்பான) முடிவுகளை எடுக்கும் போது சிங்கள மக்களின் இன்றைய மோகம் எத்தனை நாள் என்ற கேள்வி எழும். இது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் நிகழப் போவதில்லை. அதற்குப் பிறகும் உடனே நிகழும் எனத் தோன்றவில்லை.



இலங்கைத் தீவின் முதன்மையான அரசியல் முரண்பாடு அரசுத் தலைவர் தேர்தலிலும் தீர்க்கமாக வெளிப்படக் கண்டோம். சிங்களப் பகுதிகள் அனுராவுக்குப் பெருவெற்றி தந்த போதே தமிழர் தாயகமாம் வடக்கும் கிழக்கும் அவரைப் பெரிதாக மதிக்கவே இல்லை. பொதுக் கட்டமைப்பு நிறுத்திய பொது வேட்பாளர் பெற்ற வாக்குகளையும், தேர்தலைப் புறக்கணித்தவர்களின் வாக்குகளையும், தமிழர்களுக்கு ஏதோ செய்யப்போவதாக உறுதி சொன்ன சிங்கள வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளையும் கூட்டிப் பார்த்தால் அனுரா காணாமலே போய் விடுவார். இலங்கைத் தீவின் இரு தேசங்களும் எந்த அளவுக்கு வேறுபட்டு நிற்கின்றன என்பதற்கான ஒரு குறியீடுதான் இது.

சிறிலங்காவின் சனநாயகம் என்பது இறுதிநோக்கில் தமிழர்களுக்கு இனநாயகமே என்பதைக் கணப் பொழுதும் மறவாதீர்! இப்போது இலங்கையை ஆளும் அரசமைப்புச் சட்டத்தின் ஆக்கத்திலும் அடுத்தடுத்த மாற்றத்திலும் ஈழத் தமிழ்த் தேசத்துக்கு எவ்விதப் பங்கும் இருந்த



**தோழர் தியாகு,**
பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம

தில்லை. இந்தச் சட்டமும் தமிழர் தேசத்தை அறிந்தேற்றது இல்லை. சேனநாயகா முதல் திசநாயகா வரை யாரும் இந்த நிலையை மாற்றவில்லை. இந்த அரசமைப்புச் சட்டத்தையும் அது தோற்றுவித்த நிறுவனங்களையும் அடியோடு புறக்கணிக்கத் தமிழினத்துக்கு அனைத்து வகை நியாயமும் உண்டு. ஆனால் தமிழ்த் தேசிய இனம் தன் இருப்பையும் அரசியல் விருப்பையும் ஓங்கியறைந்து உணர்த்துவதற்கு அதே சட்ட நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சில முற்காட்டுகள் உண்டு. 1976 வட்டுக் கோட்டைத் தீர்மானத்துக்குக் குடியாட்சியக் கட்டளை



பெற 1977 பொதுத் தேர்தலில் வழியமைத்துக் கொண்டோம் அல்லவா?

அண்மையில் நடந்து முடிந்த அரசுத் தலைவர் தேர்தலில் தமிழர்களின் அரசியல் திரட்சியைத் தென்னிலங்கைக்கும் உலகுக்கும் உணர்த்தும் நோக்குடன் தெளிவானதொரு தேர்தல் அறிக்கையை முன்வைத்து தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திப் போட்டியிட்டதும் இவ்வகையான உத்திதான்! இது ஒரு தொடக்கம் மட்டுமே! இதையே நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடர்ந்தால் நன்று! பொதுக் கட்டமைப்பு தேர்தலுக்கான கட்டமைப்பாக மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் அறப் போராட்டத்துக்கான ஒன்றாகவும் இருந்து தேர்தல் அறிக்கையில் முன்வைத்த கோரிக்கைகளைத் தமிழ் மக்களின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தி வரவும் வேண்டும்.

தாயகத்திலும் தமிழகத்திலும் புலம்பெயர் தமிழுலகத்திலும் ஈடுசெய்நீதிக் கோரிக்கைக்கு வலுச்சேர்த்துத் தமிழினத்தின் அற வலிமையை அரசியல் வலிமையாக மாற்றும் பணியைத் தொடர வேண்டும். இந்த அடிப்படையில் பொதுக் கட்டமைப்பை மேலும் விரிவாக்கவும் வலுவாக்கவும் முயல வேண்டும். அவசர வெற்றிகளை எதிர்பார்த்து ஏமாந்தவர்களும், சிங்களப் பேரினவாத அரசியலிடம் சரணடைந்து நீதியில்லாத மீளிணக்கம் காண விழைவோரும் பொதுக் கட்டமைப்பைக் கலைக்கவே காரணம் தேடுவர். இவர்களைப் பொருட்படுத்த வேண்டிய தில்லை.

தமிழினம் எந்த சிங்களப் பேரினவாதக் கட்சிக்கும் தோள் கொடுக்கவும் வேண்டாம். எந்த சிங்களப் பேரினவாதக் கட்சியின் தோளேறவும் வேண்டாம். நாம் தோழமையோடு தோள் சேர்த்துத் தமிழ் அறத்துக்காகவும் தமிழ் உரிமைக்காகவும் தேர்தல் களமும் அறப்போர்க் களமும் காண்போம்.



தமிழ் இளைஞர்கள் சிலர் அல்லது பலர் அனுராவின் வெற்றியில் மயங்கித் தமிழ் அரசியலைத் துறந்து சிங்கள அரசியலால் உள்வாங்கப்படும் ஆபத்தும் உள்ளது. இவர்களுக்கு சிங்களப் பேரின வாத அரசியலில் அனுரா வின் வரலாற்றுப் பங்கு தெரியாது. அல்லது தெரிந்தாலும் அதை மறக்கவே ஆசைப்படுவர். இன்னும் சிலர் அனுராவை எதிர்க்கும் வலிமை தமிழ்த் தலைமைகளுக்கு இல்லை என்ற கருத்தில் வேறு சிங்கள முகாம்களில் இடம்பிடிக்க முனைவர்.

இந்த இருசாராரின் நிலைப்பாடுகளும் எதிரெதிரானவை போல் தோன்றினாலும் இறுதி நோக்கில் தமிழ்த் தேசியத்துக்கே ஊறு செய்யக் கூடியவை என்பதை உணர்த்தியாக வேண்டும். அவர்களின் அரசியல் போக்குகள் தமிழர்களின் அடிமைநிலையை நிலைப்படுத்தவே செய்யும் என்பதைப் புரிய வைக்கும் நடைமுறைச் சான்றுகள் போகப் போக வெளிப்படும். ஆனால் இடைப்பட்ட காலத்தில் தமிழ்த் தேசியக் களம் உடனடி நலன்களுக்காகச் சிதைந்து போகும் ஆபத்து உள்ளது. சில அற்ப நலன்களுக்காக தேசத்தை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

வேல்ஸில் இருந்து அருஸ்

கடந்த செவ்வாய்க்கிழமை(1) இரவு ஈரான் இஸ்ரேல் மீது கடும் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது. அமெரிக்க புலனாய்வுத்துறையினாலும், இஸ்ரேலிய மொசாட்டினாலும் முன்கூட்டியே தாக்குதல் திட்டத்தை அறிய முடியாதவாறு ஏவுகணைகளை நகர்த்திய ஈரான் ஒரு அதிர்ச்சிகரமான தாக்குதலை நடத்தியுள்ளது.

நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரானின்தாக்குதலில்நவாடிம்வான்படைத் தளம் உட்பட இரண்டு வான்படைத்தளங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும், நவாட்டின் வான்படைத்தளம் அமெரிக்காவின் ஐந்தாம் தலைமுறை விமானங்களாக எப்-35 விமானங்களில் தரிப்பிடம் எனவும் அதில் 20 விமானங்கள் முற்றாக அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஒரு விமானத்தின் பெறுமதி 120 மில்லியன் டொலர் களாகும்.

இணைந்து ஈரானை அமெரிக்கா தாக்கினால் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கத் தளங்கள் அனைத்தும் தாக்கப்படும் என ஈரான் தெரிவித்துள்ளது. பிரித்தானியா பிரதமர், ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இந்த தாக்குதலை கண்டித்துள்ளன.

ஏப்பிரலில் இடம்பெற்ற தாக்குதலை விட இந்த தாக்குதல் இரண்டு மடங்கு பெரிதானது எனவும், ஈரான் 200 இற்கு மேற்பட்ட பலிஸ்ரிக் ஏவுகணைகளை பயன்படுத்தியுள்ளதாகவும்



# இஸ்ரேலினால் தடுக்க முடியாத ஈரானின் ஆயுதங்கள்

இஸ்ரேலின் முக்கிய நகரமான ரெல் அவிவ் உட்பட இஸ்ரேலின் பல நகரங்களில் இருந்த படை நிலைகள் மீது ஏவுகணைகள் சரமாரியாக வீழ்ந்து வெடித்ததை காணொளிகள் மூலம் பார்க்கக்கூடியதாக இருந்தது.



இந்த தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் முழுவதும் 1864 இடங்களில் அபாய ஒலிகள் எழுப்பப்பட்டதுடன், மக்கள் அனைவரும் பதுங்கு குழிகளுக்குள் பதுங்கியதையும் காணக்கூடியதாக இருந்தது.

தனது உண்மையான வாக்குறுதி- 2 படை நடவடிக்கை வெற்றி பெற்றுள்ளதாகவும், 90 விகிதமான ஏவுகணைகள் இலக்குகளை தாக்கி அழித்துள்ளதாகவும் ஈரான் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்துமாக இருந்தால் இதைவிட மோசமான தாக்குதலை இஸ்ரேல் எதிர்கொள்ள நேரிடும் என ஈரானின் அதிபர் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

ஈரானில் வைத்து கொல்லப்பட்ட ஹமாஸின் அரசியல் பிரிவின் தலைவர் இஸ் மயில் ஹனியா, கடந்தவாரம் லெபனானில் கொல்லப்பட்ட ஹிஸ்பல்லாக்களின் தலைவர் சயீட் கசான் மற்றும் அவருடன் கொல்லப்பட்ட ஈரானின் ஜெனரல் ஆகியோருக்கு பதிலடியாகவே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது. தமது நாட்டை பாதுகாக்க தாம் தயாராக உள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

அதேசமயம் ரெல் அவிவ் பகுதியில் உள்ள இஸ்ரேலின்புலனாய்வுஅமைப்பானமொசாட்டின் தலமையகத்தை ஏவுகணை தாக்கியதாக சி.என்.என்



மத்தியகிழக்கில் பைடன் அரசின் கொள்கையின் தோல்வியையே ஈரானின் பதிலடி காட்டுவதாக இந்த தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்த ரஸ்யாவின் வெளிவிவகார பேச்சாளர் மரியா சக்கரோவா தெரிவித்தள்ளார்.

அதேசமயம் இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் பென்சமின் நெத்தனியாகு பதுங்கு குழியை நோக்கி அவசரமாக ஓடும் காட்சிகளும் சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.


இந்த தாக்குதல் என்பது இஸ்ரேலின் அயன் டோம் முற்றாக செயலிழந்துள்ளதையே காட்டுகின்றது அல்லது ஈரானிடம் நவீன தொழில்நுட்பம் உள்ளதை காட்டுவதாக பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்துள்ளார். ஆனால் தாக்குதலுக்கு முன்னர் இஸ்ரேலின் அயன் டோமின் கணினிகளை ஈரான் சைபர் தாக்குதல் மூலம் செயலிழக்கச் செய்துவிட்டதாக கூறப்படுகின்றது.

தமக்கு இந்த தாக்குதல் தொடர்பில் முன்னர் தெரிந்திருக்கவில்லை என பென்ரகன் தெரிவித்தள்ளது.

ஆனால் இறுதி நேரத்தில் தான் தாம் ரஸ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் தெரியப்படுத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளதுடன், இஸ்ரேலுடன்

அமெரிக்காவின் பென்ரகனின் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பற்றிக் தெரிவித்துள்ளார்.

மத்திய தரைக்கடலில் நின்ற தமது டிஸ்ரோயர் கப்பல்கள் ஈரானின் ஏவுகணைகளை முறியடிப்பதற்கு 24 ஏவுகணைகளை ஏவியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் அவை ஈரானின் ஏவகணைகளை தாக்கியதா என்பதை அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார்.




இந்த தாக்குதலை தொடர்ந்து அமெரிக்க அதிபர் பைடன் மற்றும் பிரித்தானியப் பிரதமர் கியர் ஸ்ராமர் ஆகியோர் இஸ்ரேலிய அதிபர் பென்சமின் நெத்தனியாகுவை தொடர்புகொண்டு பேசியதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு நிமிடத்தையும் பைடன் அவதானிப்பதாக அமெரிக்க வெள்ளைமாளிகைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஈரான் நவீன பலிஸ்ரிக் ஏவுகணைகளை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ச்சேகோஸ் தீவுகளின் இறைமையை மொறீஷியசிடம் மீளக் கையளிக்கிறது ஐக்கிய இராச்சியம்



தமிழில்: ஜெயந்திரன்

அரைநூற்றாண்டுக்கும் மேலான காலப்பகுதியின் பின்னர், தொலை தூரத்திலே, இந்து சமுத்திரத்தில் அமைந்திருந்தாலும், மூலோபாய ரீதியில் மிகவும் முக்கியத்துவம்வாய்ந்தச்சேகோஸ் தீவுத் தொகுதியின் இறைமையை தாம் கைவிடுவதாக ஐக்கிய இராச்சியம் தற்போது அறிவித்திருக்கிறது. பல வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் எட்டப்பட்ட இந்த உடன்படிக்கையின் பிரகாரம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக ஐக்கிய இராச்சியம் இந்த ச்சேகோஸ் தீவுகளை மீண்டும் மொறீஷியஸ் இடம் கையளிக்க விருக்கிறது.

அமெரிக்க அரசினால், அதன் கடற்படைக் கப்பல்களுக்கான ஒரு இராணுவத்தளமாகவும், அதே நேரம் நீண்ட தூரம் சென்று தாக்குகின்ற குண்டு வீச்சு விமானங்களுக்குமான விமானத் தளமாகவும் பயன்படுத்தப்படும் தியேகோ கார்சியாவில் உள்ள வெப்ப மண்டலப் பவளப்பாறையையும் இது உள்ளடக்குகிறது.

ஐக்கிய இராச்சியம் மற்றும் மொறீஷியஸ் ஆகிய இரு நாடுகளினதும் பிரதம மந்திரிகளும் இணைந்து வெளியிட்ட அறிக்கை, எந்த நேரமும் முறிந்துவிடும் ஆபத்துடன் பல தசாப்தங்களாக இரண்டு நாடுகளுக்கிடையேயும் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறது.



தியேகோ கார்சியாவில் அமைந்துள்ள, அமெரிக்க மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுக்குச் சொந்தமான இராணுவத்தளம் அங்கு தொடர்ந்து பேணப்படும் என்பதில் உடன்பாடு எட்டப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பிரதேசத்தில், மேற்கத்தைய நாடுகளுக்கும் இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கும் இடையே பூகோளரீதியிலான பகைமைகள் மூண்டிருக்கும் பின்புலத்தில், இவ்விடயமே உடன்படிக்கை சாத்தியமாவதற்கான காரணியாக அமைந்திருக்கிறது.

இங்கு எட்டப்பட்டிருக்கும் உடன்பாடு, ஒப்பந்தம் என்ற இறுதி வடிவத்தைப் பெறுவதற்கு இன்னும் சில வேலைகள் செய்யப்பட வேண்டியிருந்தாலும், கூடியளவு விரைவாக அதனை நிறைவு செய்ய இரு தரப்புகளும் சம்மதம் தெரிவித்திருக்கின்றன. “எமக்கிடையேயான நல்லுறவில் இது ஒரு முக்கிய தொடக்கமாகக் கருதப்படுவதுடன், கருத்து வேறுபாடுகளையும் சட்ட ஒழுங்கையும் சமாதான முறையில் தீர்த்துவைப்பதற்கு நாம் காண்பிக்கும் அர்ப்பணத்தையும்இது வெளிப்படுத்திநிற்கிறது” என்றுஐக்கிய இராச்சியத்தின் பிரதம மந்திரி கீத் ஸ்ராமர், மற்றும் மொறீசியசின் பிரதம மந்திரி பிரவிந் ஜூக்நோத் ஆகிய இருவரும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.



“பிரதேச ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் பாதுகாப்புக்கு அத்தியாவசியமானதாக விளங்குகின்ற தியேகோ கார்சியாவில் அமைந்துள்ள இராணுவத்தளம், நீண்ட காலத்துக்கும் பாதுகாப்பான விதத்திலும் தொடர்ந்து செயற்றிறன் மிக்க வகையில் இயங்குவதை தாம் உறுதிப்படுத்துகின்றோம்” என்றும் இரு தலைவர்களும் தங்களது அறிக்கையில் வெளிப்படுத்தியிருந்தனர். “கடந்த காலங்களில் நிகழ்ந்த தவறுகள் மீண்டும் இடம்பெறாமல் இருக்கவும், ச்சேகோஸ் தீவுகளில் வாழும் மக்களின் நலன்களைப் பேணுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படும்” என்று குறிப்பிட்ட உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்கள் சட்டவிரோதமாகக் குடிபெயர்வதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு பாதையும் இந்த உடன்பாட்டின் மூலம் மூடப்படுவது குறிப்பிட்ட உடன்பாட்டினால் கிடைக்கக் கூடிய நன்மைகளில் ஒன்றாகும்.

சிறீலங்காவைச் சேர்ந்த தமிழர்கள் பலர் குறிப்பிட்ட தீவில் அமைந்துள்ள கம்பி வேலிகளுக்குள் மூன்று வருடங்களாக அடைத்து வைக்கப் பட்டிருப்பதுடன், அவர்களது நிலைமையை முடிவுசெய்வது தொடர்பாகமிகவும் சிக்கல் வாய்ந்த சட்டப் போராட்டங்களும் நடை பெற்று வருகின்றன. இவ்வாறாக தடுத்துவைக்கப் பட்டிருப்பவர்களுக்கு இந்த உடன்பாடு எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும் என்பது தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.



இந்த உடன்பாட்டின்படி, வருடாந்தக் கொடுப்பனவுகள் மற்றும் உட்கட்டமைப்புக்கான முதலீடு உள்ளிட்ட நிதியுதவிச் செயற்பாடுகளை ஐக்கிய இராச்சியம் வழங்குதவற்கான உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கிறது.

தியோகோ கார்சியாவைத் தவிர்ந்த ஏனைய ச்சேகோஸ் தீவுகளில் இனிமேல் மொறீசிஷஸ் அரசு தனது மீள்குடியேற்றச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

தியேகோ கார்சியாவில், எதிர்வரும் 99 வருடங்களுக்கு இராணுவத்தளம் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை ஐக்கிய இராச்சியம் உறுதிப்படுத்தும்.

“இராஜீக செயற்பாடுகள் மூலமும் கூட்டுச் சேர்ந்தும் நீண்டகாலப் பிரச்சினைகளை அமைதி வழிமுறையிலும் இருதரப்புக்கும் நன்மை பயக்கக் கூடிய வகையிலும் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதற்கு இது ஒரு தெளிவான எடுத்துக்காட்டு” என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் குறிப்பிட்ட உடன்படிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்தார். “தேசிய ரீதியிலும், பிராந்தியம் மற்றும் பூகோள ரீதியிலும், மிக முக்கியமான பங்கை வகிக்கின்ற ஒரு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## சிம்ம சொப்பனம் ... தொடர்ச்சி ...

மக்கள் விசனப்பட்டுக் கொள்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலை மலையக அரசியல்வாதிகளின் மீது மக்கள் வெறுப்படைவதற்கும் அடிப்படையாக அமைந்தது. இதேவேளை தொழிற்சங்கவாதிகள் தொழிற்சங்கத்தை அடிப்படையாக வைத்து அரசியல் களம்புகுவதற்கும்ஆர்வம்செலுத்தினர். இதனால் தொழிற்சங்கக் கலாசாரம் சில வேளைகளில் சீர்குலைவதற்கும் இதுஉந்துசக்தியாக அமைந்தது என்பதையும் சொல்லியாக வேண்டும்.

இது ஒரு புறமிருக்க மலையக கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களிடையே நிலவும் முரண்பாடுகள் காரணமாக ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் கலாசாரம் கடந்த காலத்தில் வலுப்பெற்று காணப்பட்டது. இது அண்மையில் கை கலப்பில் கூட முடிவடைந்ததும் உங்களுக்கு நினைவிருக்கலாம். இத்தகைய முரண்பாட்டு போக்குகள் தொழிலாளர்களின் உரிமைகள் பறிபோவதற்கும் ஏதுவாகின. இதேவேளை தொழிற்சங்கங்கள் மற்றும் மக்கள் நலனுக்காக கட்சி மாறுவதாக கூறிக்கொண்டு கட்சித்தாவலில் ஈடுபட்டவர்கள் தனது நலனை அதிகரித்துக் கொண்டனரே தவிர மக்களுக்கு இதனால் எவ்விதமான நன்மையும் ஏற்படவில்லை. உரக்கச் சத்தமிட்டு பேசுவதால் உண்மையை மூடி மறைக்க முடியாது என்பதை இத்தகையோர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மலையக அரசியல்வாதிகள் சிலரின் பிற்போக்கான, சுயநலம் சார்ந்த செயற்பாடுகள் காரணமாக மலையக மக்கள் அதிருப்தியடைந்துள்ளதையும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக மலையக இளைஞர் யுவதிகள் நாட்டு மக்களைப்போன்றே பாரம்பரிய கட்சி வழிமுறைகளிலிருந்தும் வேறுபட்டு புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப முற்படுகின்றனர். 'அரகலய' தொடர்பில் இவர்கள் காட்டிய ஆர்வம் இதற்கு சான்று பகர்வதாகவுள்ளது. இந்த ஆர்வம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இலஞ்சம், ஊழல்கள்,அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு முடிவுகட்டி நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ள ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவதற்கு மலையக இளைஞர்களும் பங்காளியாக வேண்டும். ஜனாதிபதியின் வெற்றியில் கூட இளைஞர் படையின் பங்களிப்பு அதிகளவில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

### சேவல் சின்னம்

நாட்டுக்கு சாபக்கேடாகவுள்ள ஊழல், மோசடி மிக்க அரசியல் முறைமை முழுமையாக களையப்பட வேண்டும். அதேபோன்று ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய அரசியல் தலைவர்கள் அரசியலில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும். நாடு புதிய பாதையில் பயணிப்பதற்கும், புதிய தலைமுறையினருடன் இணைந்து செல்வதற்கும் உரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்சவும் அண்மையில் வலியுறுத்தி இருந்தமை நோக்கத்தக்கதாகும்.

இதனிடையே எதிர்வரும் நவம்பர் 14 ம் திகதி பாராளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மலையக கட்சிகள் தேர்தலில் போட்டியிட தயாராகி வருகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூட்டணி அமைப்பது தொடர்பான முயற்சிகள் தமது தரப்புக்கு சாதகமாக அமையாத பட்சத்தில் தனிவழி செல்ல இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உத்தேசித்துள்ளதாக தெரியவருகின்றது. இதனடிப்படையில் அக்கட்சி நீண்ட கால இடைவேளையின் பின்னர் சேவல் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து பரிசீலித்து வருவதாகவும் செய்திகள் வலியுறுத்துகின்றன. ஏனைய கட்சிகளும் தேர்தலுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இதனிடையே ஜனாதிபதி சிறுபான்மை மக்களின் மீது அளப்பரிய ஈடுபாடு கொண்டவர். இம்மக்களின் துன்பதுயரங்களை நன்கறிந்தவர். இவரின் ஆட்சியில் சிறுபான்மை மக்கள் பல வழிகளிலும் உயர்வடைவது திண்ணமாகும். அதிலும் அநுரகுமாரவின் வெற்றி மலையக மக்களின் வாழ்வியல் போக்குகளில் ஒரு திருப்புமுனையாக அமையும். இம்மக்கள் அடையாளத்துடன் வாழ்வதற்கான சகல உரிமைகளையும் அவர் பெற்றுக் கொடுப்பார். மலையக அரசியல் கட்சிகள் அநுரகுமாரவுக்கு ஆதரவளிக்கவில்லை. இதனால் இம்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவர் புறந்தள்ளி விடுவார் என்று சொல்வதற்கில்லை. சகல இனங்களையும் சமமாக மதிக்கும் அவர் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பலவற்றுக்கும் நியாயமான தீர்வினை பெற்றுக் கொடுப்பார் என்பதில் ஐயமில்லை. அநுரவோடு மலையகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் இணைந்துள்ளனர். இவர்களின் ஆலோசனைகளும் மலையக அபிவிருத்திக்கு உந்துசக்தியாக அமையும். இந்நிலையில் மலையக கட்சிகள் தங்களின் சுய இலாபங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு அதிலிருந்து விடுபட்டு மக்கள் நலன்கருதிய எதிர்கால திட்டங்களை முன்வைத்து அதனை நிறைவேற்றிக்கொள்ள முனைதல் வேண்டும் என்று பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இரா.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

### அடிப்படை கட்டமைப்பு

எவ்வாறெனினும் நடக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தல் மலையக கட்சிகளுக்கு ஒரு சவாலாகவே அமையவுள்ளது. இக்கட்சிகள் கடந்தகால பிழைகளை திருத்திக் கொண்டு ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வின் ஊடாக தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டும். இன்னும் விதண்டாவாதம் பேசிக்கொண்டு மக்களை பிரித்தாளவும் பலிக்கடாவாக்கவும் முற்படுதல் கூடாது. 'குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத கதையாக" தொடர்ந்தும் செயற்பாடுகள் அமையக்கூடாது. அத்தோடு இளைஞர் சக்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களுக்கும் இத்தேர்தலில் பங்குபற்ற வாய்ப்பளிக்க வேண்டும். இதைவிடுத்து பாரம்பரிய அடிப்படை கட்டமைப்பில் இருந்தும் மீளாத வகையில் இக்கட்சிகளின் செயற்பாடு அமைந்திருக்குமானால் தமக்குரிய சவக்குழியை தாமே தோண்டிக் கொண்ட நிலைக்கு கட்சிகளின் நிலைமை அமைந்துவிடும்.

• • •

## பொதுத்தேர் ... தொடர்ச்சி ...

மாகாண மக்கள் தமிழ் தேசிய அரசியலையும் வடகிழக்கினையும் நிராகரிக்கின்றார்கள் என்ற வகையான பிரசாரங்களை தெற்கு கட்சிகளும் பிரதேசவாத கட்சிகளும் முன்னெடுக்கும் நிலைமைகள் உருவாகியிருக்கின்றன.

இதன்காரணமாகவே இந்த தேர்தல் வடகிழக்கு மக்களுக்கு குறிப்பாக கிழக்கு மாகாண மக்களுக்கு மிக முக்கியத்துவம்வாய்ந்த தேர்தலாக காணப்படுகின்றன.கிழக்கு மக்கள் என்றும் தமிழ்தேசியத்தின் பாதையில் பயணிப்பவர்கள் என்பதை மீண்டும் இந்த நாட்டிற்கு காட்டவேண்டிய பாரிய பொறுப்பு காணப்படுகின்றது.இந்த நிலைமைகளை உணர்ந்துசெயற்படவேண்டிய நிலையில் தமிழ் தேசிய கட்சிகளும் இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் பல பிரிவுகளாக நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய சக்திகள் களமிறங்கப்படும் நிலைமைகள் காணப்படுகின்றன.இவற்றினை தடுத்து நிறுத்தி அனைவரையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது.இது தொடர்பான கோரிக்கை அண்மையில் அம்பாறை மாவட்டத்திலிருந்து விடுக்கப்பட்டுள்ளது.அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைந்து தேர்தலை முகங்கொடுத்து தமிழர் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டிருக்கின்றது. அவ்வாறு செயற்படாவிட்டால் நாங்கள் சிங்கள கட்சிகளை ஆதரிக்கும் நிலையுருவாகும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை-திருகோணமலை மாவட்டங்களில் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்து தேர்தலில் களமிறங்கப்படும்போதே அங்குள்ள தமிழர் பிரதிநிதித்துவத்தினை பாதுகாக்கமுடியும். அதேபோன்று கிழக்கில் தமிழ் தேசிய கட்சிகள் இணைந்து கேட்பதன்மூலமே தமிழர்களின் பிரதிநிதித்துவத்தினை அதிகரிக்கமுடியும்.வெறுமனே வாக்கு அரசியலுக்காகவும் சுயநல அரசியலுக்காகவும் பிரிந்துநின்று செயற்படுவதானது ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்திலும் தமிழர்களின் இருப்பினையும் தமிழர்களின் தமிழ் தேசிய கோரிக்கையினையும் வலுவிழக்கச்செய்யும் செயற்பாடாகும்.இதனை உணர்ந்து செயற்பட வேண்டிய நிலையில் தமிழர்களும் தமிழ் தேசிய அரசியல் சக்திகளும் உள்ளனர்.இதற்கான அழுத்தங்களை சர்வதேச தமிழர் அமைப்புகளும் சிவில் சமூக கட்டமைப்புகளும் வழங்கவேண்டும்.

## அவுஸ்திரேலியா ... தொடர்ச்சி ...

தது, மற்றும் உங்களை ஒவ்வொரு வருக்கும் உறுதியாக உழைப்பேன்.

நாம் சேர்ந்து சமுதாயத்தில் நல்ல மாற்றத்தை கொண்டு வர பாடு படுவோம், அனைவரின் குரலும் கேட்கப்படும் எதிர் காலத்தை உருவாக்க உறுதியாக செயல்படுவோம். இந்த பயணத்தை ஒன்றிணைந்து தொடர்வோம்!

## அமெரிக்காவில்... தொடர்ச்சி ...

அதிபர் தேர்தலில் எதி ரொலிக்கலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. எதிர் வரும் 6 வருடங்களில் 77 விகித ஊதிய அதிகரிப்பு வேண்டும் எனவும் துறைமுகப் பணிகளை அதிகளவு கணணிமயப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கோவிட்-19 பெரும்தொற்றை தொடர்ந்து துறைமுகங்கள் அதிக இலாபத்தில் இயங்குவதாகவும் அது 800 விகித இலாபத்தை எட்டியுள்ளதாகவும், ஆனால் அதனை முதலாளிகள் பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹெயிட்டியில் ... தொடர்ச்சி ...

வன்முறைகளில் இந்த வருடம் 3,600 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 48 விகிதமான மக்கள் உணவுப் பற்றாக்குறையையும் எதிர் கொண்டுள் ளனர்.

## அற்ப நலன் ... தொடர்ச்சி ...

இழந்து விடுவோம் என்று அஞ்சுவதில் நியாயம் உண்டு.

விடுதலை வேள்வியில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட பல்லாயிரம் மாவீரர்களின் ஈகம் வீண் போகாது, ஈழத் தமிழ்த் தேசம் தன்னையறிந்து தன்னையுணர்ந்து தனக்கான உரிமைப் பாதையில் தடம் பதிக்கும் என்று நம்புவோம்.

• • •

**ச்சேகோஸ் தீவு ... தொடர்ச்சி ...**

முக்கியமான இராணுவத் தளத்தின் எதிர்காலத்தை அது உறுதிப்படுத்தியிருக்கிறது" என்று பைடன் தெரிவித்திருந்தார்.

மொறீஷியஸ், சீசெல்ஸ் ஆகிய இடங்களிலும் மற்றும் இங்கிலாந்தின் சசெக்சிலுள்ள குறோளியில் வசிக்கின்றச்சேகோ தீவுகளைச் சேர்ந்தவர்களிடமும் இந்த உடன்பாடு தொடர்பாகக் கருத்துக் கேட்கப்பட்டது. தமது தாயகத்தின் நிலைமை தொடர்பாக இவர்களிடம் ஒருமித்த கருத்தைக் காணமுடியவில்லை. சிலர் இந்தத் தீவுகளுக்குத் திரும்பிச் சென்று தமது வாழ்க்கையைத் தொடர முயற்சிக்கிறார்கள். வேறு சிலர் ஐக்கிய இராச்சியத்தில் தமக்குரிய உரிமைகள் தொடர்பாக வாதிடுகிறார்கள். வேறு சிலரோ, தங்களது தீபகற்பத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை வெளியாட்களுக்கில்லை என அழுத்தம் திருத்தமாகப் பதில்சொல்கிறார்கள். தனது தந்தையின் வேர்களைக் கொண்டிருக்கும் தீவுகளுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய வாய்ப்பை இந்த உடன்பாடு தந்திருக்கிறது என்று "உலகம் முழுவதும் ஒரு நிகழ்ச்சியில்" என்ற தலைப்பில் பிபிசி 4 சேவையினால் நடத்தப்படும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாடும் போது, இஸபெல் சார்லெட் குறிப்பிட்டார்.

மீள்குடியேற்றங்களை ஏற்படுத்த மொறீஷியஸ் அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களைக் கண்ணோக்கும் போது, எங்கள் வீடு என்று சொல்லி நாங்கள் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழல் இப்போது ஏற்பட்டிருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். கலந்துரையாடல்களில் ச்சேகோஸ் தீவுகளைச் சேர்ந்தோர் பங்குபற்றாதது தொடர்பாகத் தான் மிகவும் கோபம் அடைந்திருப்பதாகவும் தாம் கைவிடப்பட்டதை உணர்வதாகவும் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த பிராங்கி பொண்ரெம் தெரிவித்தார்.

"எமது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் நாங்கள் பலமற்றவர்களாகவும் குரலற்றவர்களாகவும் இருக்கிறோம் என்று அவர் கூறியது மட்டுமன்றி, இறுதி ஒப்பந்தம் வரையப்படும் போது, ச்சேகோஸ் தீவைச் சேர்ந்த மக்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். "பிரித்தானியாவின் இந்து சமுத்திரப் பிரதேசம்" என்று தான் அழைக்கும் ச்சேகோஸ் தீவுகள் தொடர்பாக அண்மைக்காலங்களில் ஐக்கிய இராச்சியம் தனிமைப்படுத்தப்பட்டது. அதற்கான காரணம் என்னவென்றால் அதன் உயர் நீதிமன்றம் மற்றும் பொதுச்சபை உள்ளிட்ட ஐக்கிய நாடுகளின் பல அமைப்புகள், மொறீஷியஸ் அரசின் பக்கம் சாய்ந்து, ஐக்கிய இராச்சியத்தின் கடைசியான காலனீயத்தை ஐக்கிய இராச்சியம் திருப்பிக் கையளிக்க வேண்டும் என்று குரல் எழுப்பியிருந்தன.

ஐக்கிய இராச்சியத்திடமிருந்து *1968*ம் ஆண்டில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, ச்சேகோஸ் தீவுகளைக் கையளிப்பதற்குச் சட்டவிரோதமான வகையில் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதாக மொறீஷியஸ் அரசு நீண்டகாலமாக வாதிட்டு வந்திருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில், மிகப்பெரிய பவளப்பாறையைக் கொண்டிருக்கும் தியேகோகார்சியாதீவை ஒரு இராணுவத்தளமாகப் பயன்படுத்துவதற்கு, அதனைத் தாம் குத்தகைக்குக் கொடுப்பதாக, அமெரிக்காவுடன் ஐக்கிய இராச்சியம் ஒரு இரகசிய உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தது.

அந்த தீபகற்பத்திலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவு வாசிகளை பலவந்தமாக வெளியேற்றியதற்காக பின்னர் ஐக்கிய இராச்சியம் மன்னிப்புக் கோரியிருந்தது மட்டுமன்றி, மூலோபாய நோக்கங்களுக்கு குறிப்பிட்ட தீவுகள் அவசியம் இல்லாமல் போகும் போது, அவை மீண்டும் மொறீஷியசிடம் கையளிக்கப்படும் என்ற உறுதிமொழியையும் வழங்கியிருந்தது. ஆனால் மிகவும் அண்மைக்காலம் வரை, குறிப்பிட்ட தீவுகளின் மேல் உரிமை கொண்டாட மொறீஷியசுக்கு எந்த நியாயமான உரிமையும் இல்லை என்று ஐக்கிய இராச்சியம் வலியுறுத்தி வந்தது.

இவ்விடயம் தொடர்பாக பன்னாட்டுச் சமூகத்தின் காத்திரமான ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக மொறீஷியஸ் பலதசாப்தங்களாகக் கடுமையாகப் போராடி வந்திருக்கிறது. ச்சேகோஸ் தீவுகளில் தமது இல்லங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட ஒரு சிறு தொகையான மக்கள், *1960*களின் இறுதியிலும், *1970*களின் தொடக்கத்திலும், தொடர்ந்து பல தடவைகள் ஐக்கிய இராச்சியத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகளை தொடுத்திருந்தனர்.

ஆனால், மிகவும் அண்மையிலே தான் பன்னாட்டுச் சமூகத்தின் ஆதரவு அவர்களுக்குச் சாதகமாக மாறத்தொடங்கியது.

குறிப்பிட்ட தீவுகளின் காலனீயத்துக்கு ஒரு முடிவுகட்டுமாறு ஆபிரிக்க நாடுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து, ஒரு குரலில் பேசி, ஐக்கிய இராச்சியத்தின் மேல் மிகவும் கடுமையான அழுத்தத்தைப் பிரயோகித்தன. பிரெக்சிட்டின் காரணமாக பன்னாட்டு மன்றங்களில் ஐக்கிய இராச்சியத்துக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதற்கு பல ஐரோப்பிய நாடுகள் முன்வரவில்லை.

ஐக்கிய இராச்சியம் வாய்மொழி ரீதியிலான அச்சுறுத்தல்களை தமக்கு விடுப்பதாக மொறீஷியஸ் அரசு ஐக்கிய இராச்சியத்தின் மேல் குற்றம் சுமத்தியது.

ஐக்கிய நாடுகளிலும், நீதிமன்றங்களிலும், ஊடகங்களிலும் மொறீஷியஸ் மக்கள், மிகவும் நவீனத்துவம் வாய்ந்த பரப்புரைகளை மேற்கொள்ளத் தொடங்கினார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் ஐக்கியஇராச்சியத்தின்அங்கீகாரம்இல்லாமலேயே அந்தத் தீபகற்பத்தில் ஒரு கொடியை அவர்கள் நாட்டியிருந்தார்கள்.

வியாழக்கிழமை எட்டப்பட்ட உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தைகள் ஐக்கிய இராச்சியத்தின் முன்னைய அரசின் காலத்திலே தொடங்கப்பட்டிருந்தன.

ஐக்கிய இராச்சியத்தைப் பொறுத்தவரையில் பன்னாட்டு விவகாரங்கள் தொடர்பாக ஒரு அவசரமான நிலைமை தோற்றம் பெற்றது இந்த உடன்படிக்கை எட்டப்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது. அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய ஒரு சூழமைவு இருக்கும் தற்போதைய நிலைமையில், உக்ரேன் போர் தொடர்பாக ஆபிரிக்க நாடுகள் உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்கு, ச்சேகோஸ் தீவுகள் விடயம் தொடர்ந்தும் ஒரு தடையாக அமைந்துவிடக்கூடாது என்பதில் ஐக்கிய இராச்சியம் குறியாக இருந்தது.

இவ்வாறான ஒரு பரந்த இலக்குடன் தொடர்ந்து வந்த பழமைவாத மற்றும் தொழிற் கட்சிகளின் பிரதம மந்திரிகள் செயற்பட்டு வந்த பொழுதிலும் ஐக்கிய இராச்சியத்தில் ஒரு சிலர் இதற்கு எதிராகக் குரல் கொடுக்கக்கூடிய வாய்ப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன.

"ஐக்கிய இராச்சியத்தின் நலன்களுக்கு எதிரான வகையில் குறிப்பிட்ட உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும், இதற்கு முதல் ஆட்சி செய்த பழமைவாதக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டமை அவமானத்துக்குரியது" என்றும் பழமைவாத ரோறிக் கட்சியின் தலைமைப் பதவிக்காகப் போட்டியிட்ட ரொம் ரூகெண்டாற் கருத்துத் தெரிவித்தார். "எமது நட்புநாடுகளுக்கு எதிரான மிகவும் வெட்கக்கேடான பின்வாங்குதல்" என்று இந்த உடன்படிக்கையை அவர் அழைத்த அதே வேளை, "மிகவும் பலவீனமான உடன்பாடு" என்று மேனாள் வெளியுறவுச் செயலரான ஜேம்ஸ் கிளெவளி கருத்துத் தெரிவித்தார்."ச்சேகோஸ் தீவு மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளை இந்த உடன்பாடு நீக்கும்" என்று தெரிவித்த மனித உரிமைகள் கண்காணிப்பகம், முன்னர் இழைக்கப்பட்ட தவறுகள் தொடர்ந்தும் இழைக்கப்படும் ஆபத்து இருக்கிறது என்றும் தெரிவித்தது.

"ச்சேகோஸ் தீவு மக்களுடன் உருப்படியான கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால், ஐக்கிய இராச்சியம், அமெரிக்க நாடுகளுடன் இப்போது மொறிஷியசும், தொடரும் ஒரு காலனீயக் காலக் குற்றத்துக்கான பொறுப்பைச் சுமக்க வேண்டியிருக்கும்" என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் முக்கிய ஆலோசகரான கிளைவ் போல்ட்வின் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இவை எப்படியிருந்தாலும் இந்தக் கணத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

ஐக்கிய இராச்சியம் தான் கட்டிவைத்திருந்த பூகோள ஏகாதிபத்தியத்தை கைவிட்டு ஏறத்தாழ அரைநூற்றாண்டு கழிந்த நிலையில், அந்த ஏகாதிபத்தியத்தின் மிகவும் கடைசியான ஒரு சிறு பகுதியைத் திருப்பிக் கொடுக்க அது இப்போது சம்மதித்திருக்கிறது. தயக்கமான மனநிலையுடன் இவ்விடயத்தை ஐக்கிய இராச்சியம் மேற்கொண்டிருந்த பொழுதிலும், அமைதியான முறையிலும் சட்டரீதியாகவும் ஐக்கிய இராச்சியம் அதனை இப்போது நிறைவேற்றியிருக்கிறது.

பிரித்தானியாவுக்கு வெளியே தொடர்ந்தும் அதற்குச் சொந்தமாக இருக்கின்ற பிரதேசங்கள் பின்வருமாறு: அங்குயில்லா, பேர்மியூடா, பிரித்தானிய அன்டாட்டிக் பிரதேசம், பிரித்தானிய வேஜின் தீவுகள், கேமன் தீவுகள், போக்லான்ட் தீவுகள், ஜிப்றோல்ற்றர், மொன்ற்செறாட், பிற்கேய்ண், செயின்ற் ஹெலேனா, அஷெண்ஷன் மற்றும் திரிஸ்தான் த குண்யா, தென் ஜோர்ஜியா, மற்றும் தென் சாண்விச் தீவுகள், ரேக்ஸ் மற்றும் கெய்க்கோஸ் தீவுகள். இவற்றுடன் சைப்பிர சில பிரித்தானியாவுக்குச் சொந்தமான அதன் இறைமையுடன் கூடிய இரு தளங்களும் இருக்கின்றன.

ச்சேகோஸ் தொடர்பான அறிவித்தல் மேற்கொள்ளப்பட்ட பொழுது " பிரித்தானிய கரங்களில் தீவுகள் பாதுகாப்பாக இருக்கின்றன" என்று போக்லாண்ட் தீவுகளின் ஆளுநர் தெரிவித்தார். "போக்லாண்டில் ஐக்கிய இராச்சியத்தின் இறைமையைப் பாதுகாக் கும் விடயத்தில், ஐக்கிய இராச்சியம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது" என்று சமூக வலைத்தளமொன்றில் மேற்கொண்ட பதிவில் அலன் பிளேக் தெரிவித்தார்.

*நன்றி: bbc.com*

**பிரான்ஸ் ... தொடர்ச்சி ...**

ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

அதேசமயம் பிரான்ஸ் அதிப ரின் ஆலோசகர் இமானுவேல்போன் மற்றும் பிரான் ஸின் படைத்துறை அமைச்சர் ஆகியோரையும் தேவால் சந்தித்துள்ளார். பாதுகாப்பு மற்றும் விண்வெளி தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் இணைந்த செயற்பாடு மற்றும் பூகோள அரசியல் மாற்றங்கள் தொடர்பான உள்ளக தகவல் பரிமாற்றம் போன்றன தொடர்பிலும் இந்த சந்திப்பில் கலந்துரை யாடப்பட்டன.

இந்தியாவுக்கான இரண்டா வது மிகப் பெரும் ஆயுத வினியோக நாடாக பிரான்ஸ் உள்ளது. *2019* ஆம் ஆண்டில் இருந்து *2023* ஆம் ஆண்டு வரையிலான தகவல்களின் அடிப்படையில் பிரான்ஸின் ஆயுத ஏற்றுமதியில் *29* விகிதமானவை இந்தியாவுக்கானது.

## இஸ்ரேலினால்... தொடர்ச்சி...

(Ballistic missiles) ஏவியதாக intelligence consultancy firm Armament Research Services (ARES) என்ற அமைப்பின் ஆய்வாளர் Patrick Senft தெரிவித்தள்ளார். இந்த ஏவுகணைகள் குரூஸ் ஏவுகணைகளை விட இலக்குகளை மிக விரைவாக எட்டிவிடும். அதிக வேகம் காரணமாக இந்த ஏவுகணைகளை தடுப்பது என்பது கடினமானது.



இஸ்ரேலிடம் மூன்று அடுக்கு வான் பாதுகாப்பு பொறிமுறை உள்ளது. முதலாவது அயன்டோம் இது தரையில் இருந்து 10 கி.மீ உயரத்தில் வைத்து உந்துகணைகளை தடுக்கும் சக்தி கொண்டது. அதன் தூரவீச்சு 70 கி.மீ. இரண்டாவது டேவிட் ஸ்லிங் வகை ஏவுகணை இது இருந்து 15 கி.மீ உயரத்தில் வைத்து இடைத்தர தூரவீச்சு ஏவுகணைகளை தடுக்கும் சக்தி கொண்டது. அதன் தூரவீச்சு 300 கி.மீ. மூன்றாவதான அரோ ஏவுகணைத் தொகுதி இது இருந்து 100 கி.மீ உயரத்தில் வைத்து பலிஸ்ரிக் ஏவுகணைகளை




தடுக்கும் சக்தி கொண்டது. அதன் தூரவீச்சு 2,400 கி.மீ.

ஆனால் ஈரான் தனது பற்றா-1 மற்றும் பற்றா-2 என்ற கைப்பசொனிக் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலின் அரோ ஏவுகணைகளை தாக்கி அழித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த ஏப்பிரல் மாதம் ஈரான் மேற்கொண்ட தாக்குதல்களை விட இந்த வாரம் மேற்கொண்ட தாக்குதல்களில் பயன்படுத்திய ஏவுகணைகள் அதிகளவில் இலக்குகளை தாக்கியுள்ளதாக Missile Defense Project at the Center for Strategic and International Studies (CSIS) என்ற அமைப்பின் அதிகாரியான மார்க் கன்சியன் தெரிவித்துள்ளார்.

அதாவது இந்த தாக்குதல் மூலம் ஈரான் மூன்று விடையங்களை கூறியுள்ளது. ஒன்று இஸ்ரேலின் வான்பாதுகாப்பை ஈரான் இலகுவில் உடைத்துவிடும். இரண்டாவது இஸ்ரேலின் எந்த பகுதியையும் தாக்கும் வல்லமை ஈரானுக்கு உண்டு. மூன்றாவது ஈரானிடம் அணுவாயுதம் இருந்தால் அதன் மூலம் இஸ்ரேலை தாக்குவதற்கும் ஈரானினால் முடியும் என்பது தான் அது.

அதாவது ஈரானின் தொழில்நுட்ப வளர்ச்சியை இஸ்ரேலும், மேற்குலகமும் தொடர்ந்து குறைத்து மதிப்பிட்டால் அதற்கான விலையை செலுத்த வேண்டும் என்பதே யதார்த்த மானது.

• • •

## இந்தியாவை... தொடர்ச்சி...

ஜெய்சங்கர்தான். அதேபோல, அநுர மேற்கொள்ளப்போகும் முதலாவது விஜயமும் இந்தியாவுக்கானதுதான்.

ஜனாதிபதியாக அநுர வருவதை இந்தியா விரும்பியிருக்கவில்லை என்பது இரகசியமானதல்ல. இந்தியா யாரை விரும்பியது என்பதும் அதற்காக அவர்கள் முன்னெடுத்த முயற்சிகளும் கூட அனைவருக்கும் தெரியும்.

புதுடில்லி இப்போது அவசரம் அவசரமாக காய்களை நகர்த்துவது அநுரவை எவ்வாறாயினும் தமது பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்!

இலங்கையின் பொருளாதாரத்துக்கு இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியைப் பெற்ற போது, அவரைப் பாதுகாத்தது இந்தியாவின் பொருளாதார உதவிகள்தான். சீனாவைப் பொறுத்தவரையில் அதன் நிபந்தனைகள் கடுமையானதாகவும், கடன் தொகை குறைவானதாகவும் இருக்கும். ஆனால், இந்தியாவின் உதவிகள்தான் இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உடனடியாக உதவியது.

அநுரகுமாரவைப் பொறுத்தவரையிலும் பொருளாதாரத்தை ஸ்திரமாகப் பேணுவதும், நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதும்தான் உடனடித் தேவை. பொருளாதார ஸ்திரப்பாட்டைப் பேணுவதற்கும், அதனை மேலும் மேம்படுத்துவதற்கும் இந்தியாவின் ஆதரவு அவசியம் என்பதை அநுர உணர்கின்றார். இந்தியாவை முன்னிலைப்படுத்துவதன் மூலமாகவே அதனை மட்டுமன்றி, அரசியல் ஸ்திரப்பாட்டையும் பேணமுடியும் என்பதும் அவருக்குத் தெரியும். அதனைவிட, சர்வதேச அரங்கில் வரக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு புதுடில்லியுடனான உறவுகளை சமூகமாகப் பேணுவது அவசியம் என்பதையும் அவர் புரிந்துகொண்டுள்ளார்.

கடந்த கால வரலாறுகள் எவ்வாறு இருந்தாலும், அதனை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் போது அதனைச் செய்யத்தான் வேண்டியிருக்கும். "மாற்றம்தான் மாறாதது" என்பது உண்மை. எதிர்ப்பு அரசியலைச் செய்யும் போது சொல்வதை ஆட்சிக்கு வந்த பின்னர் செய்ய முடியாது என்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த இரண்டு நாட்களாக அநுர நடத்திய பேச்சுக்களே ஆதாரமாக இருக்கின்றது. ஆக, இந்தியாவுடனான அவரது கடந்தகால அணுகுமுறைகளையும் மாற்றிக்கொள்வது அவரைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாததுதான்.

• • •

## தமிழ் தேசிய... தொடர்ச்சி...

இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டு வரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழ வேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வு அவசியம். ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஸ்டி முறையிலான தீர்வு ஒன்றையே நாம் திடமாக வலியுறுத்தி நிற்கிறோம். இலங்கையில் நாம் சிறுபான்மையினர் அல்ல. இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் எமக்கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இறைமையுள்ள மக்கள் சமூகத்தினராவோம்.

எமது சுயநிர்ணய உரிமை, இறைமை என்பதை சமஷ்டி முறைமையின் மூலம் உறுதி செய்துகொள்ள திடசங்கற்பம் கொண்டுள்ளோம். இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர். எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினரும் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப்போகின்றனர்.

எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்து செயற்படுவோம். அதற்காக, அனைவரும் ஜனநாயக வழி நின்று செயற்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போகும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், கட்சி ரீதியாக தனித்து போட்டி போடாமல் ஒரு கூட்டு அல்லது கூட்டணியாக தேர்தலில் போட்டியிட்டு வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அதிக மக்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே, அதிக மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் சென்று எமது தமிழ் மக்களின் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வினை வேண்டி, இலங்கை தேசத்துக்குள்ளும் சர்வதேச ரீதியாகவும் குரல் கொடுக்க வேண்டும் என வேண்டி நிற்கின்றோம்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் கூட்டாக இணையாத சந்தர்ப்பத்தில் வாக்குகள் சிதறப்பட்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்கள் குறைவடைவதுடன், குறிப்பாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களை இழக்க வேண்டி நேரிடும் என்று தெரிவித்துள் ளனர்.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.